★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூலை 18 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 168 | Tuesday 18, July, 2023 | 12பக்கங்கள் | 50/-




## இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு விரைவில் நிறைவடைய வாய்ப்பு

### அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன்



இலங்கை மற்றும் கானாவுக்கான கடன் மறுசீரமைப்பு விரைவில் நிறைவடையக்கூடும் என தாம் நம்புவதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பாய்வுகளை சரியான முறையில் இலங்கை மற்றும் கானாவுக்கு முன்னெடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 04

### நாட்டிலுள்ள சுமார் 5 கோடி 72 இலட்சம்

## வங்கி வாடிக்கையாளர்களின் பணத்திற்கு கட்டாய காப்புறுதி

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டிலுள்ள வங்கிகளில் வைப்புக்கணக்கு வைத்துள்ள 5 கோடியே 72 லட்சம் வாடிக்கையாளர்களின் வைப்புப் பணத்தை பாதுகாக்கும் வகையில் காப்புறுதி திட்டமொன்று கட்டாயமாக்கப்படுமென 04

## இலங்கை - பாகிஸ்தான் நாடுகளின் தற்போதைய பொருளாதார நிலை

### இருநாட்டு தலைவர்களும் தொலைபேசியில் கலந்துரையாடல்



பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் இலங்கை ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரு நாடுகளினதும் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடினார். இதன்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) நாட்டின் ஒப்பந்தம் தொடர்பாக பாகிஸ்தானுக்கு 04

# 1000 பாடசாலைகளுக்கு தொலைத்தொடர்பு வசதிகள்

### அரசாங்கம் விரைவான நடவடிக்கை - அமைச்சர் சுசில்



### பெறுபேறுகள் வரும்வரை தொழில்சார் கற்கை நெறி O/L பரீட்சையின் பின் 03 மாதங்களுக்கு பயிற்சி

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையின் பின் பெறுபேறுகள் வரும்வரை மூன்று மாதங்களுக்கு மாணவர்களுக்கு அந்தந்த பாடசாலையிலேயே தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கான வாய்ப்பை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாடசாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும்வகையில்புதிதாக1000 பாடசாலைகளுக்கு தொலைத் தொடர்பு வசதிகளைபைபர்ஒப்ரிக் (Fiber Optic Connection) மற்றும் அதற்குத் தேவையான மின்சார வசதிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றாதபோதும் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான தொழிற்பயிற்சியை பெற்றுக் கொடுக்க இதன்மூலம் வழிவகுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க 04



கொழும்பு துறைமுக நகர செயற்கை கடற்கரையை தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்து வருகின்றனர். பிள்ளைகளுடன் குடும்பங்களாக மக்கள் அங்கு வருகை தந்து மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

படம்: சுலோச்சன கமகே



03 டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

### வடக்கு, கிழக்கு

## தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அமெரிக்கத் தூதுவருடன் சந்திப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்குமிடையில் நேற்று விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அதிகாரப் பகிர்வு, காணாமலாக்கப்பட்டோர் மற்றும் காணிகளை மீளப் பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மேற்படி சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

## தபால் திணைக்களம் ஒருபோதும் தனியார் மயமாக்கப்படாது

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார உறுதி



அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் தபால் திணைக்களத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதே தவிர, அதனை தனியாருக்கு விற்பதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லை எனத் தெரிவித்த ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் 04

### அரசாங்கத்தின் புதிய உரக் கொள்கையினால்

## 10 வருடங்களுக்குப் பின்னர் 512,000 ஹெக்டேயரில் சிறுபோக பயிர்ச்செய்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தின் புதிய உரக் கொள்கை காரணமாக 10 வருடங்களுக்குப் பின்னர் சிறுபோகத்தில் 512,000 ஹெக்டேயரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். எதிர்வரும் 6 போகங்களில் நெல் அறுவடையை இரண்டு மடங்காக 04

## சீன கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர் வருகிறார்

### நாட்டில் 05 தினங்கள் தங்கியிருப்பார்



லோரன்ஸ் செல்வநாயகம்

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பிரதிநிதியொருவர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். 04

## A/L விடைத்தாள் திருத்தும் பணிகள் 90 வீதம் நிறைவு

### பரீட்சை திணைக்களம் நேற்று தெரிவித்தது




லோரன்ஸ் செல்வநாயகம்

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 90 வீதம் நிறைவு பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் 04

### நாட்டிலுள்ள அனைத்து CPC

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 50 வீத இருப்பை பேணல் அவசியம்

### பின்பற்றாவிடின் கூட்டுத்தாபனம் சுவீகரிக்கும் என எச்சரிக்கை



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் ஐம்பது வீத எரிபொருள் இருப்பு பேணப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொள்ளும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 04



03 குளவி தாக்குதலுக்கு பெண் தொழிலாளி பலி — லிந்துலை பகுதியில் நேற்று சம்பவம்



03 2027க்கு பின்னர் இலங்கைக்கு IMF ஆதரவு தேவைப்படாது — இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க



03 முறையற்ற இடமாற்றம் தொடர்பான அஜித் ரோஹணவின் மனு மீதான விசாரணை ஓகஸ். 03 இல்

## நாட்டில் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு

### கடந்த 13 நாட்களில் 55,566 பேர் வருகை



இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தின் முதல் 13 நாட்களில் மாத்திரம், 55 ஆயிரத்து 566 சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா 04

### முப்பது வயதுடைய இளம் தாயான

## லிந்துலை பெண்ணுக்கு சவூதியில் சித்திரவதை

### குண்டூசிகளை உடலில் ஏற்றி கொடுமை



லிந்துலை கிளனிகல்ஸ் தோட்டத்தில் 30 வயதுடைய இளம் தாய் ஒருவர் குடும்ப வறுமை காரணமாக கடந்த ஜூன் மாதம் கொழும்பிலுள்ள 04

### நீர்க்கட்டணத்தை செலுத்தவில்லை;

## 90,000 பாவனையாளரது நீர் வழங்கும் சேவை துண்டிப்பு

### நீர் வழங்கல் அதிகார சபை அதிரடி



நீர்க்கட்டணம் செலுத்தத் தவறிய 90,000 பாவனையாளர்களுக்கு நீர் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது. இவ்வருடம் மே மாத நிலவரப்படி சுமார் 04

## பொலிஸார் எனக்கூறி வீட்டினுள் புகுந்து கொள்ளை

### பதுளையில் வர்த்தகரின் வீட்டில் திருடர் கைவரிசை



பொலிஸார் எனக் கூறி, பதுளையிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீடொன்றிற்குள் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கி தங்கம் உள்ளிட்ட பொருட்களை 04

# "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" நூல் வெளியீட்டு விழா






தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர்,அமரர் கலாசூரி இ.சிவகுருநாதனின் 20 ஆம் ஆண்டு நினைவாக ஐங்கரன் விக்கினேஸ்வரா(அவுஸ்திரேலியா) தொகுத்த "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" நூல் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று முன்தினம் தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக பணிப்பாளர் ஆசிரியர் பீடம்,லேக்ஹவுஸ் சிசிர பரணதந்திரி, சிறப்பு விருந்தினர்களாக ஏ.எம்.நகியா (உறுப்பினர் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு)எழுத்தாளர் லெ.முருகபூபதி (அவுஸ்திரேலியா), முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா, வீரகேசரி பிரதம ஆசிரியர் சிறிகஜன் ஆகியோருடன் முன்னிலை வகித்து முதற்பிரதியை இலக்கிய புரவலவர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்.




































தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 18 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්


தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# நகுலேஸ்வர குருக்களின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாதது

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபம்



இலங்கைத் திருநாட்டில் அமைந்த சிவத்தலங்களில் தொன்மை மிக்க சிவத்தலத்தின் சீர்மிகு சிவாச்சார்யாராக இருந்து எழுபத்தைந்து வருடங்களுக்கும் மேலாகச் சிவப் பணி ஆற்றிய பண்பாளர், மகாராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகுமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, அந்தச் சீர்மிகு உத்தமர், மாறாத புன்னகையோடு வந்தோரை வரவேற்று இறைநாமம் உச்சரித்து ஆத்மார்த்தமாக ஆசீர்வதிக்கும் பண்பு என்றும் மனதில் இடம் பிடித்திருக்கும். இந்தப் பெருமகனாரின் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அன்னாரின் ஆத்மா இறைநிழலில் சாந்திபெறப் பிரார்த்திக்கிறேன் என முன்னாள் ஜனாதிபதி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசாங்கத்தின் வருமான வரி

# கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் முதல் ஆறு மாதத்தில் 93 வீத அதிகரிப்பு

## ஜனவரி முதல் ஜூன் வரையில் 696, 946 மில்லியன் ரூபா அறவீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய இறைவரி திணைக்களமானது இந்த வருடத்தின் முதல் ஆறு மாதத்தில் 696, 946 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் நூற்றுக்கு 93% அதிகரிப்பு காணப்படுவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் தேசிய இறைவரி திணைக்களம் 361, 832 மில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில்

அதன் வருமானம் 696, 946 மில்லியன் ரூபாவாக காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. வரி கொள்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்க்கமான மாற்றங்கள், நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளமை, வரி அறவீடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட வேலைத் திட்டங்கள் ஆகியன இந்த வருமான வரி அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

### X–Press Pearl கப்பல் விபத்து நட்டஈடு

# அமைச்சரவை நியமித்த குழு சிங்கப்பூர் பயணமானது

## இன்றும் நாளையும் பேச்சுவார்த்தை



*XPress Pearl* கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கான இணக்கப்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட குழு நேற்று (17) சிங்கப்பூருக்கு பயணமானது.

இவ்விசேட குழுவிற்கு சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் தலைமை தாங்கவுள்ளார்.

குறித்த பேச்சுவார்த்தையை இன்று (18) மற்றும் நாளை மறுதினம் (19) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கப்பல் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் சட்டத்தரணிகள் மற்றும் அதிகாரிகள் குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு துறைமுக செயற்கை கடற்கரை இலவசமாக பார்வையிட மக்களுக்கு வசதி

## இரண்டு நாட்களில் 3000 பேருக்கு அதிகமானோர் வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்கை கடற்கரையை பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இரண்டு தினங்களில் 3000 த்துக்கும் மேற்பட்டோர் அதனை பார்வையிட்டுள்ளதாக துறைமுக நகர நிர்வாக அதிகார சபை தெரிவித்தது.

மேற்படி செயற்கை கடற்கரை கடந்த 15 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக மக்கள் பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ள நிலையில் மறுநாள் 16ஆம் திகதி இரவு 9 மணி வரை மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதனை பார்வையிட்டுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்தது.

பொதுமக்களுக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கும் அதனை பார்வையிடுவதற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள கடற்கரை விளையாட்டு, நீர் விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபடவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு அங்குள்ள விற்பனை கூடங்களில் பொருட்களை பெற்றுக் கொள்வதுடன் சிற்றுண்டி சாலைகளில் உணவருந்தக் கூடிய வசதியும் காணப்படுவதாக அந்த அதிகார சபை தெரிவித்தது.

# குமரவேல் நாயனார் இலங்கை வருகின்றார்



பகையில்லா உள்ளம், பட்டினியில்லா வயிறு, நோயில்லா உடல் என மக்களை நடைமுறைபடுத்தி வருபவரும், சித்தர்கள் மகாபொற்சபை மடாலயம் உருவாக்கி சுமார் 23ஆண்டு காலமாக தமிழ் சித்த மரபோடு சித்த மருத்துவம், ஆலயமரபு வழிபாடு, கும்பாபிஷேக பணிகள் மற்றும் யந்திர பூஜைகள் ஆகமவழிபாடு, சித்தர்கள் வழிபாடு அகியவற்றை நடத்திவருபவருமான சீர்வளர்சீர் குமரவேல் நாயனார் வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலின் 36 ஆவது ஆண்டு ஆடிப்பூர மகோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக இன்று (18.7.2023) தமிழகத்திலிருந்து இலங்கை வருகின்றார்.

மருத்துவமுகாம் அமைத்து மக்களை நல்வழிப்படுத்துதல் உடல், மனம் செம்மைப்படுத்துதல், கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு இயற்கை

04

# வடக்கு, கிழக்கு எம்.பிக்களை இன்று ஜனாதிபதி சந்திக்கிறார்

## ஜனாதிபதி செயலகத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று (18) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார்.

பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அதிகாரப் பகிர்வு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல் மற்றும் பல விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்னதாக இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்திய விஜயத்தின் போது ஜனாதிபதி விக்கிரமசிங்க, அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண தேர்தல்கள் தொடர்பில் இந்திய தலைவர்களுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி கடந்த வருடம் பதவியேற்றதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 2027க்கு பின்னர் இலங்கைக்கு IMF ஆதரவு தேவைப்படாது

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க



2027ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின்(IMF) ஆதரவு தேவைப்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளை தெளிவூட்டுவதற்காக இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். சர்வதேச சமூகத்திற்கு முன், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுள்ள நாடாக இலங்கை முன்மாதிரியாக திகழ்வதாக நிதி இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

# டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து வரும் நிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதற்கிணங்க மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 310 ரூபா 49 சதமாகவும் விற்பனைப் பெறுமதி 324 ரூபா 67 சதமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த 14ஆம் திகதி மத்திய வங்கி இறுதியாக வெளியிட்டுள்ள நாணயமாற்று வீதத்திற்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 310 ரூபா49 சதமாகவும் விற்பனை பெறுமதி 324 ரூபா 67 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






### முறையற்ற இடமாற்றம் தொடர்பான

# அஜித் ரோஹணவின் மனு மீதான விசாரணை ஓகஸ். 03 இல்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



தமது முறையற்ற இடமாற்றம் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவின் அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் 03ஆம் திகதி மேற்கொள்வதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்றைய தினம் மேற்படி மனு மீதான விசாரணை நீதிபதிகளான பிரித்தி பத்மன் சூரசேன மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதிபதிகள் அடங்கிய குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதற்கான அடுத்த விசாரணையை எதிர்வரும் 03ஆம் திகதி முன்னெடுப்பதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் தமக்கு இடமாற்றம் வழங்கிய தீர்மானத்தை செல்லுபடியற்ற தாக்குமாறு கோரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன அடிப்படை மனித உரிமை மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

அது தொடர்பான விசாரணை நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது நீதிபதிகள் குழாம் மேற்படி தீர்மானத்தை அறிவித்துள்ளது.

# கிழக்கு கடற்பரப்பில் தீப்பரவல் சம்பவமா?


## கடற்படை முற்றாக மறுத்து விளக்கம்

கிழக்கு கடற்பரப்பில் தீப்பரவல் சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என கடற்படை விளக்கமளித்துள்ளது.

திருக்கோவில் கோமாரி கடற்பரப்பில் நேற்றிரவு தீப்பரவல் ஏற்பட்டதாக கடற்படைக்கு மீனவர்களால் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதனை கடற்படையினர் உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன், நேற்றைய தினமும் தேடுதல் பணி இடம்பெற்றிருந்தது. இந்தநிலையில், தீப்பற்றியமைக்கான எந்தவொரு சான்றும் அங்கு கிடைக்கப்பெறவில்லை.

04



# குளவி தாக்குதலுக்கு பெண் தொழிலாளி பலி

## லிந்துலை பகுதியில் நேற்று சம்பவம்

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

லிந்துலையில் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேன பம்பரகலை தோட்டத்தில் வசிக்கும் 80 வயதுடைய பெண் தொழிலாளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தோட்ட தொழிலில் ஓய்வு பெற்றவர் இருப்பினும் நாளாந்த

04

# அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட கட்டடங்கள்

## ஸ்ரீஜயவர்தனபுரவிற்கு மாற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பிலுள்ள பிரதான நிருவாக கட்டடங்கள் சிலவற்றை ஸ்ரீஜயவர்தனபுரவிற்கு கொண்டுசெல்வதற்கான ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் பிரதமர் செயலகம், அலரி மாளிகை, அமைச்சரவை செயலகம் மற்றும்

04

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE தினகரன் வாரமஞ்சரி

## திறந்த கட்டுரைப் போட்டி

### தொனிப் பொருள்

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

### பரிசுத் தொகை

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

### கட்டுரையின் வடிவம்

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீ தியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.


## குமரவேல்...

03ஆம் பக்கத் தொடர்

வளம் பேணுதல் தொடர்பாக அறிவூட்டுதல், புனித நதிகள் வழிபாடு, சித்தபுருஷர்களுக்கு குருபூஜை செய்வித்தல் போன்றவற்றுடன் ஆன்மீக பணிகளையும் தேசியசிந்தனையுடன் பல அண்டை மாநிலம் சென்று சமூக சேவையையும் செய்து வருகின்றார். சித்தமரபு, தமிழ் கலாசாரம், பண்டையகால வாழ்வியல் முறைகளை சமூகத்திற்கு எடுத்துரைத்து செயல்படுத்தி வரும் இவர், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்து, திண்டுக்கல் நகரில் பாரம்பரிய வள்ளுவர் தொழிலான வாணியல், மருத்துவப் பணிகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்கின்றார்.

## கிழக்கு...

03ஆம் பக்கத் தொடர்

அந்த பகுதியில் பயணித்த சரக்கு கப்பல் ஒன்று பழுதடைந்த நிலையில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலின் ஒளியென கடற்படை குறிப்பிட்டுள்ளது.

## குளவி...

03ஆம் பக்கத் தொடர்

ஊதியத்துக்காக தோட்டத்தில் தேயிலை கொய்யும் பணியில் ஈடுப்பட்டிருந்த போதே குளவிக் கொட்டுக்கு உள்ளாகி லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அலரி...

03ஆம் பக்கத் தொடர்

வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றை ஸ்ரீஜயவர்தனபுர பகுதிக்கு கொண்டுசெல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, பாதுகாப்புத் தொடர்பான அறிக்கை உள்ளிட்ட அத்தியாவசியமான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதுதொடர்பில் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு நகரில் அமைந்துள்ள வர்த்தக பெறுமதி கொண்ட பாரம்பரிய கட்டடங்களை சுற்றுலா பிரதேசங்களாக மாற்றம் செய்யும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை பாகிஸ்தான்...

ஆதரவளித்த இலங்கை ஜனாதிபதிக்கு அவர் நன்றி தெரிவித்தார். பிராந்திய அமைதி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் இலங்கையின் பங்களிப்புக்கு மதிப்பளிப்பதாகவும் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மிக விரைவில் வெளிவரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டியதற்காக பிரதமர் ஷெபாஸ் ஷெரீபுக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கடினமான பொருளாதார சூழ்நிலையில் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் முயற்சிகளை இலங்கை ஜனாதிபதி பாராட்டினார்.

## சீன கம்யூனிஸ்ட்...

கொழும்பிலுள்ள சீன தூதுவராலயம் அது தொடர்பில் தெரிவிக்கையில், மேற்படி கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் சீன சொங்கிக் நகரின் செயலாளருமான யுவான் பியாஜூன் நாளை 19ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருவதுடன் அவர் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என்றும் தெரிவித்துள்ளது.

அவர் இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் இலங்கையில் உள்ள உயர் அரசியல் பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## A/L விடைத்தாள்...

தெரிவித்துள்ளது. மேற்படி பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை எதிர்வரும் 27 ஆம் திகதி நிறைவு பெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான பொறியியல் தொழில்நுட்பம் செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவு பெறஉள்ளதாகவும் 13,000 பரீட்சாத்திகளுக்காக 48 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொது தராதர உயர் தரத்துடன் சம்பந்தமான உயிர் பல்வகைமை தொழில்நுட்ப பாடத்திற்கான செயன்முறை பரீட்சை எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை 77 மத்திய நிலையங்களில் நடைபெறும் என்றும் அதற்காக 15,000 பேர் பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு....

இது குறித்து 770 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் இதுவரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஐம்பது வீத எரிபொருள் இருப்பை பராமரிக்காது போனால், அவை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் கையகப்படுத்தப்படும். கொழும்பு, ராஜகிரியவில் இதுவரை விதிகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நாட்டில் சுற்றுலா....

அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் இந்தியாவில் இருந்தே அதிகளவானோர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 ஆயிரத்து 169 பேர் இந்தியாவில் இருந்தும் 4 ஆயிரத்து 474 பேர் பிரித்தானியாவில் இருந்தும் 2 ஆயிரத்து 893 பேர் சீனாவில் இருந்தும் இந்த மாதத்தில் இலங்கைக்கு அதிகளவில் வந்துள்ளனர்.

இதன்மூலம் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 80 ஆயிரத்து 440 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 90,000 பாவனையாளரது....

8 பில்லியன் ரூபாய் நீர் கட்டணங்கள் நிலுவையில் உள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

மேலும், மொத்த நீர் கட்டண தொகையில் 7.1 பில்லியன் ரூபாய் நிலுவை, வீட்டு நீர் விநியோக பாவனையாளர்களால் செலுத்தப்படாமல் உள்ளது.

மத வழிபாட்டுத் தலங்களில் 32 மில்லியன் ரூபாவும், பொது நீர் விநியோகத்தில் 262 மில்லியன் ரூபாவும், தொழிற்சாலைகளில் 15 மில்லியன் ரூபாவும் மற்றும் அரச நிறுவனங்களில் 656 மில்லியன் ரூபாவும் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளது.

நிதி நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 90,617 பாவனையாளர்களின் நீர் விநியோகத்தை துண்டித்துள்ளதுடன், 5,277 நுகர்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

## பொலிஸார்...

கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளை ஹல்தோட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் 7 பேர் கொண்ட கும்பலே இவ்வாறு கொள்ளை இட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கொள்ளைச் சம்பவத்தில் சுமார் 40 இலட்சம் பெறுமதியான தங்கம் மற்றும் பணத்தை கொள்ளையடித்துள்ளதாக அங்குருவாதொட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவ் வீட்டிற்கு சென்ற கொள்ளை கும்பல், பொலிஸார் என அறிமுகம் செய்து கதவை திறக்கச் செய்துள்ளனர். அதன் பின் தடிகளோடும் கூறிய ஆயுதங்களோடும் உள்ளே நுழைந்து வீட்டு உரிமையாளர் மற்றும் அவரது 2 மகன்மார் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டு இக்கொள்ளையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைக்கான...

இந்தியாவில் ஆரம்பமாகியுள்ள, ஜி20 உச்சி மாநாட்டிற்கு முன்னதாக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கடன்களை பெற்றுக்கொண்ட நாடுகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு செயல்முறை பற்றிய தெளிவை வழங்க, கடன் மறுசீரமைப்பு பயனர் வழிகாட்டி அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு பூச்சிய வட்டிக் கடன்களை வழங்குவதாகவும் அது உறுதியான நிதி நிலைப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட பல நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்க சர்வதேச நாணய நிதியம் உதவ வேண்டும் என அவற்றுக்கு உதவ அமெரிக்க திறைசேரி தயாராக உள்ளதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்துள்ளார்.

## வங்கி வாடிக்கையாளர்களின்...

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வங்கிகள் விசேட நியதிகள் சட்ட மூலத்தின் ஊடாக அதுதொடர்பான சட்ட ஏற்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வங்கிகள் விசேட நியதிகள் சட்டமானது முழு நாட்டினதும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மிக முக்கியமானதாகும்.

அந்தவகையில் இதன்மூலம் வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. முன்பு இல்லாத வகையில் பலமான சட்ட ஏற்பாடுகளை தயாரித்து அதனை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எமது நாட்டில் 5 கோடியே 72 இலட்சம் வங்கி வாடிக்கையாளர்கள்

காணப்படுகின்றனர். அவர்களின் 15 டிரில்லியன் ரூபா நிதி வைப்பிலடப்பட்டுள்ளது. அந்த நிதி பாதுகாக்கப்பட வேண்டும். அதன் பாதுகாப்பு தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் முன்வைக்கப்பட்டன.

சில நிதி நிறுவனங்கள் பலவீனமடையும் போது வாடிக்கையாளர்கள் முகங்கொடுக்க நேரும் நிலையை நாம் கடந்த காலங்களில் அவதானித்துள்ளோம். அந்த வகையில் இப்புதிய சட்டத்தின் மூலம் நிதிநிறுவனங்கள் அவ்வாறு பலவீனமடையமானால் மத்திய வங்கியானது அதில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

முறையான வேலைத்திட்டத்தை மத்திய வங்கியால் அது தொடர்பில் முன்னெடுக்க முடியும். அந்தவகையில் அனைத்து வங்கிகளும் தனது வாடிக்கையாளர்களின் வைப்புப் பணத்தை பாதுகாப்பதற்கு காப்புறுதியொன்று நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

இந்தச் சட்டத்தின் மூலம் அதனை மேற்கொள்ள முடியும். வங்கி வாடிக்கையாளர்களும் அவர்கள் வைப்பிலிடும் பணமும் இதன்மூலம் பாதுகாக்கப்படும். அதற்கிணங்க வங்கிகள் விசேட கட்டளைச்சட்டம் தொடர்பான சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்ப ஆலய வருடாந்த தேர்த் திருவிழா

கொழும்பு 15, அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான வருடாந்த தேர்த் திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் அளுத்மாவத்தையில் அருள் சுரக்கும் ஆனந்த ஐயப்பா சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 5.45 மணிக்கு மஹா கணபதி ஹோமாம், அஷ்டாபிஷேகம் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு ஆச்சார்ய வரணம் கொண்டு வருதல் மற்றும் கொடியேற்றதோடு திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஐந்து நாட்களும் ஆனந்த ஐயப்பனுக்கு கேரளா தர்ம சாஸ்தா சன்னிதானத்தில் நடைபெறும் ஆகம விதிமுறைகேற்ப விஷேட பூஜைகளோடு, சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி பூஜைகளும் இடம் பெற்று 6ம் நாளான ஞாயிற்றுக்கிழமை 30.07.2023 அன்று காலை கணபதி ஹோமாம், அஷ்டாபிஷேகம், திருபள்ளி எழுச்சி, ஆராட்டு என்பன நடைபெறும். தொடர்ந்து காலை 9.00 மணிக்கு ஆனந்த ஐயப்ப சுவாமி தேரேறி அளுத் மாவத்தை வீதியோடு முகத்துவாரம் காவல் நிலைய வழியாக ஸ்ரீ மகா விஷ்ணு கோவிலை சென்றடைந்து மட்டக்குளி விஸ்வைக் சுற்று வட்டத்தினூடக மீண்டும் அளுத்மாவத்தை வழியாக ஆலயத்தை வந்தடையும்.

அன்று பகல் விஷேட பூஜா வழிபடுகளோடு கொடியிறக்கம், கலசாபிஷேகம் என்பன நடைபெறும். இதை தொடர்ந்து திருவிழா இனிதே நிறைவு பெறும். அனைத்து பக்த உள்ளங்களையும் ஆலய விஷேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு ஐயனின் பூரண ஆசியை பெற்று கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபை கேட்டு கொண்டுள்ளது.

## லிந்துலை பெண்ணுக்கு....

முகவர் மூலமாக சவுதி நாட்டிக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு அந் நாட்டு மொழி தெரியாத காரணத்தால் வீட்டு உரிமையாளர் மூலம் கடுமையாக தாக்கி சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

கணவன் மற்றும் அவரின் உறவினர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த முகவர் மற்றும் உபமுகவர் இருவரிடமும் இச்சம்பவம் தொடர்பாக பல முறை தெரிவித்த போதிலும், பணம் கொடுத்தால் மீண்டும் நாட்டிற்கு எடுத்து தருவதாகவும் உபதரகர் அச்சுறுத்தியதாக கணவன் தெரிவிக்கின்றார்.

சவுதி நாட்டில் உள்ள வெளிநாட்டு பணியகத்திற்கு தெரிந்தவர் ஒருவரின் உதவியுடன் குறித்த பெண்ணை இலங்கைக்கு திருப்பி அழைத்து வரப்பட்டு கடும் உடல் சுகயீனமுற்ற நிலையில் தற்போது நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் வைத்தியர்கள் பரிசோதனை செய்தபோது உடம்பில் அதிகமான குண்டு ஊசிகள் இருப்பது தெரிய வந்துள்ளது. உடம்பில் இருந்து இதுவரை நான்கு குண்டு ஊசிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் இன்னும் நான்கு ஊசிகள் உடம்பில் இருப்பதுடன் இதனை அகற்ற வைத்தியர்களால் திகதியும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணின் கணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் கூறுகையில் “எங்களுக்கு வீடு இல்லை. வெளிநாடு சென்றால் வீடு ஒன்றை அமைத்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் சென்றேன். என்னை லிந்துலை கேம்பிரி தோட்டத்தில் இருக்கின்ற தரகர் எனது வீட்டுக்கு வருகைதந்து கணவருடன் பேசிய பின்பு கொழும்பில் உள்ள தரகர் மூலம் அனுப்பிவைத்தனர்.

எனக்கு பயிற்சிகள் வழங்கவில்லை. அந்த நாட்டு மொழி தெரியாது என கூறியபோது, அதனை அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

எப்படியோ சமாளித்து கொள்ளலாம் என நினைத்தபோதும் என்னால் அவர்கள் கூறுவதை புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் வேலைகளை செய்து கொண்டிருந்த போது என்னை தவறாக பேசியதோடு ஒவ்வொரு நாளும் அடித்து கன்னத்தில் அறைவது சாப்பாடு கொடுக்காமல் விடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டனர்.

பின்னர் குளிப்பதற்காக குளியல் அறைக்கு சென்ற போது அங்கு பல வந்தமாக கதவை திறந்து கொண்டு என்னை தாக்கியதோடு எனது உடம்பு பகுதியில் குண்டூசிகளை குத்தினார்கள். நான் எவ்வளவு கெஞ்சி கேட்ட போதிலும் தாக்கினார்கள்.

நாங்கள் வறுமை காரணமாக தான் வெளிநாடு செல்கின்றோம். அங்கு எந்த பாதுகாப்பும் இல்லை. இலங்கையில் உள்ளவர்கள் பொய்யான தகவல்களை கூறி எங்களை போன்றவர்களை அனுப்பினாலும் எந்த பாதுகாப்பும் வழங்குவதில்லை. இனி யாருக்கும் இந்த நிலை வரக்கூடாது” என கண்ணீர் மல்க இவர் கேட்டுக் கொண்டார்.

## 1000 பாடசாலைகளுக்கு...

சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை ஜேர்மன் கைத்தொழிற்பயிற்சி நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர் வெளிநாடுகளில் நிலவும் பயிற்சிபெற்றவர்களுக்கான கேள்வியை நிவர்த்திசெய்யும் வகையில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாடளாவிய ரீதியிலுள்ள மத்திய நிலையங்களில் பாடங்களை கற்கும் நிலையில் அந்த காலத்தை குறைத்துக்கொள்ளும் வகையில் பாடசாலைகளிலேயே தொழிற்பயிற்சி பாடத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜேர்மன் கைத்தொழில் நிறுவனத்தின் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் வரவேற்புக் காணப்படுகிறது.

ஜேர்மன் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த நிறுவனம் இயங்குவதுடன் அங்குள்ள பாடத்திட்டங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று ஏனைய கைத்தொழிற் பயிற்சி நிறுவனங்களின் நிலைமைகளையும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தபால் திணைக்களம்...

ஷாந்த பண்டார , முத்திரை கட்டணங்களையோ , தபால் கட்டணங்களையோ அதிகரிக்க எதிர்பார்க்கவுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தபால் திணைக்களத்தை மறுசீரமைப்பதற்காக புதிய சட்ட மூலம் தயாரிப்பு பணிகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இவ்வாண்டுக்குள் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம். கடந்த ஆண்டு தபால் திணைக்களத்தின் வருமானத்தை விட செலவு இரு மடங்காகும். இவ்வாண்டுக்குள் வரவை மீறிய செலவினை குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2024 இல் வரவு மற்றும் செலவினை சமநிலைப்படுத்தவும் , 2025இல் தபால் திணைக்களத்தை இலாபமீட்டும் நிறுவனமாக்குவதற்குமான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு தபால் திணைக்களத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 10 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்தில் 9 பில்லியன் தனியார் முதலீடும் , 1 பில்லியன் அரச முதலீடுமாகும். அதற்கமைய அரச , தனியார் கூட்டு முயற்சியில் தபால் திணைக்களம் டிஜிட்டல் மயப்படுத்தப்படுமே தவிர , ஒருபோதும் அதனை தனியாருக்கு விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்காது. தற்போது முத்திரைகள் ஊடாக வருடத்துக்கு 4000 மில்லியன் ரூபாவும் , முத்திரை குத்துதல் ஊடாக 668 மில்லியன் ரூபாவும் , தபால் பரிமாறத்தின் ஊடாக கடந்த ஜூன் 31ஆம் திகதி வரை 130 மில்லியன் ரூபாவும் வருமானமாக கிடைத்துள்ளன. இவை தவிர தபால் பொதி சேவை , வீடுகளுக்கே தபால் பொதிகளை விநியோகித்தல் , ஏனைய பதிவு சான்றிதழ்களை விநியோகித்தல் உள்ளிட்ட சேவைகளையும் தபால் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. தபால் பொதி சேவையை மேலும் வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு விரைவில் 1000 முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்து, அவற்றின் ஊடாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தபால் , முத்திரை கட்டணங்களை மீண்டும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை என்றார்.

## 10 வருடங்களுக்குப்...

அதிகரிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் புதிய உரக் கொள்கை காரணமாக 10 வருடங்களின் பின்னர் 512,000 ஹெக்டேயரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் உணவுத் தேவையில் 80% விவசாய உற்பத்தியை உள்நாட்டிலிருந்தே பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பத்தை விவசாயத்துறையில் உபயோகப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி இலக்காகக் கொண்ட மரக்கறி மற்றும் பழ வகை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்று ஒரு வருட காலத்தில் விவசாயிகளின் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகண்டு அவர்கள் மீண்டும் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர் பதவியேற்ற போது நாட்டின் விவசாயத்துறை எவ்வாறு காணப்பட்டது என்பதை புதிதாக குறிப்பிடத்தேவையில்லை. விவசாயிகள் உரம் கோரி வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். விவசாயிகள் விவசாயத்தைக் கைவிடும் நிலை காணப்பட்டது. விவசாயிகள் தமது விவசாய தொழில்களை கைவிட்டு வேறு பிரதேசங்களுக்கு செல்லநேர்ந்தது. இளைஞர்கள் நாட்டைவிட்டே வெளியேறினர். இத்தகைய சூழ்நிலையில் இந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு இயல்புநிலையை ஏற்படுத்த முடிந்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நம்பிக்கையின் திருத்தூதர் மகதலா மரியாள்



கத்தோலிக்க திருச்சபையானது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவுடன் தொடர்புடைய புனித மகதலேன் மரியாவின் திருவிழாவை எதிர்வரும் 23ஆம் திகதி சிறப்பிக்கின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் ஆற்றிய உரையில் மகதலா மரியாளை நம்பிக்கையின் திருத்தூதராக சுட்டிக்காட்டுகின்றார்.

புனித மகதலா மரியாள் திருதூதர்களுக்கு நற்செய்தியினை அறிவித்ததால்

"மகதலா மரியா, நம்பிக்கையின் திருத்தூதர் என, நற்செய்தியால் சுட்டிக்காட்டப்படுகிறார்.

இயேசு, உயிர்த்த நாளின் காலையில், மரியா, இயேசுவின் கல்லறைக்குச் சென்றார், காலியான கல்லறையை அவர் கண்டார், பின், இந்தச் செய்தியை, பேதுருவிடமும் மற்ற சீடர்களிடமும் சொல்வதற்காக அங்கிருந்து திரும்பினார் என, புனித யோவான் நமக்குத் தெரிவித்துள்ளார்.

என்ன நடந்தது என்பதை அறியாத நிலையில், மரியா கல்லறைக்குச் சென்றார், அங்கே உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தார்,

அவர், மரியாவை, பெயர் சொல்லி அழைக்கும்வரை, அவரை யார் என மரியா அறியாமல் இருந்தார்.

இறந்தோரிடமிருந்து இயேசு உயிர்பெற்றெழுந்தபின், இது அவர் அளித்த முதல் காட்சியாகும். இக்காட்சி, மிகவும் ஓர் ஆழமான தனிப்பட்ட நிகழ்வாக உள்ளது.


இயேசு, மகதலா மரியாவிடம் நடந்துகொண்டதுபோன்று, நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார்.

தம் பிரசன்னத்தால் நம்மை மகிழ்வால் நிரப்புகிறார். இயேசுவை நாம் சந்திக்கும்போது, அது நமக்குச் சுதந்திரத்தைக் கொணர்ந்து, வாழ்வை புதிய கோணத்தில் பார்ப்பதற்கு, நம் பார்வையைத் திறந்து வைக்கின்றது.

அது எமக்கான இந்த உலகை மாற்றுகின்றது மற்றும் இறவா நம்பிக்கையை நமக்கு அளிக்கின்றது.

உயிர்த்த ஆண்டவர், மரியாவிடம், என்னை பற்றிக் கொள்ளாதே, மாறாக, போய், உயிர்ப்பின் நற்செய்தியை மற்றவருக்கு அறிவி என்று சொன்னார். இவ்வாறு, மகதலா மரியா, கிறிஸ்தவ நம்பிக்கையின் திருத்தூதராக மாறுகிறார்.

நாமும், இவரின் செபங்களின் வழியாக உயிர்த்த ஆண்டவரைப் புதிதாகச் சந்திக்க விழைவோம். உயிர்த்த ஆண்டவர், நம்மைப் பெயர் சொல்லி அழைக்கின்றார், நம் துன்பங்களை மகிழ்வாக மாற்றுகின்றார் மற்றும், அவர் உண்மையிலேயே உயிர்பெற்றெழுந்தார் என்பதை, நம் வாழ்வால் அறிவிப்பதற்கு நம்மை அனுப்புகிறார்."



அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலி .திருத்தூதர்களுக்கு திருத்தூதுரைத்தவள்:

சமீபத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் மகதலா மரியாளின் நினைவு நாளை அப்போஸ்தலர்களை போலவே திருவிழாவாக மாற்றினார்.அதில் மகதலா மரியாளின் சிறப்பான அப்போஸ்தல பணியானது சுட்டிக்காட்டப்படுகிறது.

"ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் " என்பதே கிறிஸ்தவ மறையின் தலையாய விசுவாசமும் நற்செய்தியும் ஆகும்(1 கொரிந்தியர் 15:14).

அதை முதன் முதலில் உலகுக்கு அறிவித்தது ஒரு பெண். அவள் தான் மகதலா மரியாள். ஏதேன் தோட்டத்தில், வாழ்வு நிறைந்திருந்த நிலையில் ஏவாள் என்னும் முதல் அன்னை மனிதனுக்கு சாவினை கனி வழியாக அறிவித்தாள்.

கெத்சமணி தோட்டத்தில் , சாவும் துயரமும் நிறைந்திருந்த நிலையில் மகதலா மரியாள் என்னும் அன்னை மனிதனுக்கு வாழ்வினை நற்செய்தி என்னும் இயேசுவின் கனி வழியாக அறிவித்தாள். இதை புனித தோமா அக்குவினாரும் குறிப்பிட்டுள்ளார். புனிதர்களில் இத்தகு சிறப்பு பெயரை தாங்கியுள்ள ஒருவர் புனித மகதலா மரியாள் என்பது குறிப்பிடப்பட்டது.

கெத்சமணி தோட்டத்தில் இயேசுவை காணாத மகதலா மரியாள் கண்ணீர் வடித்தாள் என்று திருவிவிலியம் கூறுகின்றது . அவளின் அன்புக்கண்ணீரை புனித அன்ஸ்லம் "தாழ்ச்சியின் கண்ணீர் " என்று குறிப்பிடுகின்றார்.

## புனித கார்மேல் அன்னை



ஆண்டவரின் தாயும் கத்தோலிகதிருச்சபையின் தாயுமான புனித அன்னை மரியாள் பல்வேறு சிறப்பு பெயர்களில் அழைக்கப்படுகின்றார்.

அவர் புனித கார் மேல் மாதா, புனித கார்மேல் மலை அன்னை, புனித உத்தரிய மாதா என்ற சிறப்பு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றார். கத்தோலிக்க திருச்சபையானது கார்மேல் மாதாவின் திருவிழாவை இம் மாதம் 16ஆம் திகதி சிறப்பித்தது. கார்மேல் மலை என்பது பாலஸ்தீன நாட்டில் ஹைபர் வளைகுடாவில் 1800 அடி உயரத்தில் இருக்கும் ஒரு அழகிய தோட்டமாகும் எபிரேய மொழியில் கார்மேல் என்றால் அழகிய தோட்டம் என்பது பொருள்.

அன்னை மரியாளுக்கு சிறப்பு பெற்று தரும் வாழ்வு அழகிய தோட்டமாக திகழும் ஏனென்றால் அன்னை மரியாளே ஓர் அழகிய தோட்டம் தான்

அவரின் பணிவு, தாழ்ச்சி, பொறுமை, கற்பு போன்ற குணங்கள் அவளை ஒரு அழகிய தோட்டமாக மாற்றியுள்ளது.அன்னை மரியாளை நாமும் சரியாக பின்பற்றி வாழ்ந்தால் நம் வாழ்வும் அழகிய தோட்டமாக மாறும்.




## புனித பீற்றர்ஸ் கல்லூரி நூற்றாண்டு விழா






கொழும்பு பம்பலப்பிட்டி புனித பீற்றர்ஸ் கல்லூரியின் நூறாவது ஆண்டு விழா கல்லூரியின் அதிபர் அருட் சகோதரர் ரஞ்சித் ரொட்ரிகோவின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பேராயர் கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டு திறமை படைத்த மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார். இந்த நிகழ்விலும் அதனையொட்டிய சமய வழிபாட்டு நிகழ்விலும் கலந்து கொண்ட கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகளையும் படங்களில் காணலாம். படங்கள்:அஷ்ரப் ஏ சமத்

## வார்த்தை வாழ்வாக வேண்டும்

சிற்பி ஒருவர் தோற்றத்தில் ஒரே மாதிரியான ஒரே அச்சில் வார்த்தெடுத்ததைப் போன்ற மூன்று அழகான சிற்பங்களை ஓர் அரசனிடம் பரிசாகக் கொடுத்து"அரசே, மூன்றும் ஒன்றுபோல் தோன்றுகிறது என்று நினைத்து எதையும் எவரிடமும் கொடுத்துவிடாதீர்கள். காட்சியகத்தில் வைத்துப் பேணுங்கள். தோற்றம் ஒன்று போல் காணப்பட்டாலும் ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மை உண்டு". எனத் தெரிவித்தார்.

அதை வாங்கிய மன்னர் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். வேறுபாடுதான் தெரியவில்லை. எத்தனையோ பேரைக் கேட்டார். எவருக்கும் தனித்தன்மை புரியவில்லை. இறுதியாக ஓர் இளைஞன் அதனை உற்றுப் பார்த்துவிட்டு ஓர் தென்னை ஈர்க்கியை எடுத்து ஒரு சிற்பத்தின் காதுக்குள் நுழைத்தான்.அது

மற்ற காது வழியாக வெளிவந்தது. இன்னொரு சிற்பத்தில் ஒரு காது வழியாக சென்ற குச்சி வாய் வழியே வெளியே வந்தது. மற்றொரு சிற்பத்திலோ காது வழியே சென்று கழுத்து வழியாகக் கீழ் இறங்கி நெஞ்சுக்குள் குத்திட்டு நின்றது.

ஒரு காதில் கேட்டு மறு காது வழியாக விடும் மனிதர்கள்.

ஒரு காதில் கேட்டு, வாய் வழியாக விடும் மனிதர்கள்.

ஒரு காதில் கேட்டுச் சிந்தையில் நிறுத்திச் செயல்படும் மனிதர்கள் இந்த உலகில் வாழ்கின்றனர்.

"நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்களைக் குறிக்கும்." (லூக். 8:15)

விதை வீரியமானது தான். விதைப்பவரும் திறமையானவர்தான். விளைநிலத்தின் தன்மைக்கேற்ப அன்றோ வேறுபட்ட பலன் கிடைக்கும்.

திருத்தூதர் பவுல் கலாத்தியர் 6:8ல் இருவித நிலங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

1. ஊனியல்பாகிய நிலம் அதில் அழிவே அறுவடைக்கு வரும். 2. ஆவிக்குரிய வாழ்வாகிய நிலம். அதில் நிலை வாழ்வே விளைச்சலாகும்.

"நிலம், அதன் மீது அடிக்கடி பெய்யும் மழை நீரை உறிஞ்சி, வேளாண்மை செய்வோருக்குப் பயன் தரும் வகையில் பயிரை விளைவிக்குமாயின் அது கடவுளின் ஆசி பெற்றதாகும்.

மாறாக முட்செடிகளையும் முட்புதர்களையும் முளைப்பிக்குமாயின் அது பயனற்றுச் சாபத்திற்குள்ளாகும். முடிவில் அது தீக்கு இரையாக்கப்படும்" (எபி. 6:7)

இயற்கையின் படப்பிடிப்பான 'விதைப்பவர் உவமை' இயேசு சொன்னதாக எழுத்துருவில் காணும் முதல் உவமை.

அதனை வாசிக்கும் போதெல்லாம் மனித உள்ளம் பாதையோரமாகப் பண்படாமல் கிடக்கும் நிலையை எண்ணிப் பார்ப்பதா? பாறையாக இறுகிக் கிடப்பதை நினைத்து வருந்துவதா? முள்ளும் முரடுமாகப் புதர் மண்டிக் கிடக்கும் அவலத்தைக் கண்டு வேதனைப்படுவதா? அல்லது பாதை என்றும் பாராமல், பாறை என்றும் ஒதுக்காமல் முள்புதர் என்றும் தள்ளாமல் எங்கும் நல்லவனோ தீயவனோ எல்லாரும் மீட்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் தன் அருளையெல்லாம் அள்ளி வீசும் இறைவனின் இரக்கப் பெருக்கை தாராள சிந்தையை எண்ணி வியப்பதா?



தமிழரோ உழுதபின் விதைப்பர் யூதரோ விதைத்தபின் உழுவர் என்ற விளக்கம் விதைப்பவரின் செயல்பாட்டுக்கு உதாரணம்.

எந்த விவசாயி பாதை இது, பாறை இது, புதர்ப்பகுதி இது என்று தெரிந்து அறிந்து விதைப்பான்?

தெரியாமல் விழுந்தால், விதை முளைக்கவில்லையே நல்ல பலன் அளிக்கவில்லையே என்று புலம்புவான்? 'இறைவன் என்ன முட்டாளா?' என்ற எண்ணம் தலை நீட்டவில்லையா? ஆம், மனித மீட்புக்காக அடிமை உருவெடுத்த (பிலிப் 2:7) கடவுள் மடமை வடிவெடுக்கவும் தயங்குவதில்லை.

ஆனால் மனிதன் எதனை முட்டாள்தனமாகக் கருதுகிறானோ அதுவே தெய்வ ஞானத்தின் திட்டமாக இருக்கிறது. "ஏனெனில் மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையை விட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது" (1 கொரி. 1:25)

இறைவனின் அருளுக்குக் குறைவில்லை. ஆனால் அந்த அருளால் மனிதர் எல்லோரும் ஒரே அளவில் பயன்பெறுவதில்லை.

மழை பரவலாகப் பெய்யும்போது காட்டிலே கடலிலே, மேட்டிலே, மடுவிலே, வயலிலே, வரப்பிலே விழுகிறது. ஆனால் விழும் இடத்திற்கேற்பப் பலன் வேறுபடுகிறது.

ஓரிடத்தில் நில்லாது ஓடும். வேறிடத்தில் தேங்கிக் கிடக்கும். ஓரிடத்தில் புதர் வளர உதவும். வேறிடத்தில் பயிர் செழிக்க உதவும். அப்படியே இறை வார்த்தையும் அவனவன் தன்மைக்கு ஏற்பப் பலனளிக்கும்.

சூரிய உதயத்தில் எல்லா மலர்களுமா மலர்கின்றன. தாமரை மலர்ந்து சிரிக்கிறது; அல்லி வாடிக் கூம்பி விடுகிறது.

பொருட்செல்வம், அருட் செல்வம், கல்விச் செல்வம், மழலைச் செல்வம் என இப்படிச் செல்வங்கள்தாம் எத்தனை வகை.

"உண்மையில் என்னைப் பொருத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசு பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருகிறேன்." (பிலிப். 3:8) இன்று திருத்தூதர் பவுல் கூறுகின்றார்.

இயேசு யார்? "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது' ... கடவுளாயும் இருந்தது... வாக்கு மனிதர் ஆனார்.. நம்மிடையே குடிகொண்டார்" (யோ.1:1.14)

இயேசு என்னும் இறைவார்த்தை இவ்வுலகில் இரு கோணங்களில் இரு நிலைகளில் வெளிப்படுகிறது.

மனித உடலுரு எடுத்தது : இது நற்கருணை.

மனித சொல்லுரு எடுத்தது :

இது விவிலியம்.

விவிலியத்தில் இறைவார்த்தையின் ஆற்றலை விளக்க எத்தனை உருவகங்கள்! மழையாக (எசா. 55:1011), நெருப்பாக (எரே. 20:9, லூக் 24:32), வாளாக (எபி. 4:12, எபேசி. 6:17), சம்மட்டியாக (எரே. 23:29) சித்திரிக்கப்படும் இறைவார்த்தை இன்றைய நற்செய்தியில் விதையாக மனித உள்ளத்தில் ஊன்றப்படுகிறது.

ஊன்றப்படும் குறையில்லா இறைவார்த்தை நிறைபலன் அளிக்கவில்லையென்றால், சிந்திக்க எழும் கேள்வி: உன் நெஞ்சம் பாதையோரமா, கற்பாறையா, முட்புதரா, சீரிய நல்ல நிலமா?

வார்த்தை நம் வாழ்வாகட்டும்.

ஒரு பெரியவர் குருவானவர் ஒருவரிடம் வந்து அங்கலாய்த்தாராம்: "சுவாமி, பரிசுத்த வேதாகமத்தை படி படி என்று சொல்கிறீர்கள். படிக்கிறேன். ஒன்றும் புரிவதில்லை. அதுதான் பிரச்சனை.

" குரு பதிலளித்தார்: "புரியவில்லை என்பது உங்களுக்குப் பிரச்சனை. புரிகிறது என்பது தான் என் பிரச்சனை". அதாவது புரிகிறது ஆனால் வாழ முடியவில்லையே என்று கவலைப்படுகிறார்.

"எல்லா வகையான அழுக்கையும், உங்களிடம் மிகுந்துள்ள தீமையையும் அகற்றி, உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்க வல்லது.இறை வார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:21,22)



நாம் இறைவனது கையில் விதைகள். பலன் தருவதற்காக அவரால் படைக்கப்பட்டவர்கள் பலன்தரா ஒன்றுமில்லாப் பயனற்ற மனிதர்களைப் படைக்க இறைவன் தன் பொன்னான நேரத்தை வீணடிப்பதில்லை.

**அருட்பணி: இ. லூர்து ராஜ்**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம்
மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார்

ஒழுக்கம், வாய்மை, மானம் ஆகிய இந்த மூன்றிலும் நிலைதவறி நடக்காதவர்களே உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

# பொருளாதார மீட்சித் திட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பகாலப் பகுதியில் அந்நிய செலாவணி பற்றாக் குறையுடன் கூடிய கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதன் விளைவாக நாடு பல்வேறு விதமான நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டது. குறிப்பாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்தோடு அப்பொருட்களின் விலைகளும் பெரிதும் அதிகரித்தன.

இதன் காரணமாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. இருந்தும்கூட நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து பெரும்பாலான மக்கள் பொறுமை காத்தார்கள்.

இவ்வாறான சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வராத நிலைமை ஏற்பட்டது. அந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமைப் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் ஏற்றார். அவர் இப்பதவியை ஏற்றதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்தார். அதற்குத் தேவையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தார்.

இதன் பயனாக கடந்த வருடத்தின் ஆரம்ப காலப் பகுதியில் நாட்டில் நிலவிய கடும் பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக நீங்கியது. அந்த அசௌகரியங்களும் நெருக்கடிகளும் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

இந்நாடு கடந்த வருடத்தின் ஆரம்ப காலப்பகுதியில் முகம்கொடுத்தது போன்ற பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்த எந்தவொரு நாடும் விரைவாக மீட்சி பெற்றிருக்க முடியாது. அது இலகுவான காரியமல்ல.

ஆனால் இந்நாடு கடந்த காலங்களில் பொருளாதார வீழ்ச்சிகளுக்கு உள்ளான சந்தர்ப்பங்களில் அவ்வீழ்ச்சி நிலைகளில் இருந்து நாட்டை மீட்டெடுத்த அனுபவங்களின் அடிப்படையில் ஜனாதிபதி இப்பொருளாதார நெருக்கடியையும் அணுகினார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு பொருளாதாரத் திட்டங்களை அவர் முன்னெடுத்தார். அதன் பிரதிபலன்களை மக்கள் குறுகிய காலப்பகுதி முதல் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

இந்நிலையில்தான், பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி குறுகிய காலத்திற்குள் மீண்டெழுந்த நாடாக சர்வதேசம் இலங்கையை அடையாளப்படுத்தியுள்ளது'. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெறுவதற்கு மக்கள் அளித்த பங்களிப்பும் ஒத்துழைப்புமே இந்த சர்வதேச கௌரவத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றது. மக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றி இவ்வளவு வேகமாக எந்தவொரு நாட்டினாலும் மீட்சி பெற முடியாது.

இவ்வாறான நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, 'தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த வெள்ளியன்று துறைசார் நிபுணர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டார்.

இச்சமயம் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், 'தற்போது பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. அதனை உறுதிப்படுத்த நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள். பொருளாதார மீட்சிக்கு முன்வைக்கப்படும் சிறந்த திட்டங்கள், யோசனைகளை முழுமையாக செயற்படுத்துவோம். அதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளோம். குறைகளைத் திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.


தற்போது நாட்டின் பொருளாதாரம் உண்மையில் ஸ்திரமடைந்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுவதோடு, ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியும் வீழ்ச்சி அடைந்து வருகின்றது. பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதோடு இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த மற்றொரு தொகுதிப் பொருட்களுக்கான தடையை நீக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அடுத்துவரும் சில மாதங்களுக்குள் வாகனங்கள் தவிர்ந்த அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்யக்கூடிய சூழல் நாட்டில் உருவாகும்.

இந்த அனைத்து பொருளாதார மேம்பாடுகளுக்கும் ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களே அடிப்படை என்றால் அது மிகையாகாது.

ஆனாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெற்று வளமான மேம்பாட்டை அடைந்து கொள்ள வேண்டும். அதனை இலக்காகக் கொண்டுதான் அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் வகையில் முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து பிரஜைகளினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு அஹிம்சைவழியில் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் நெல்சன் மண்டேலா



## 105 ஆவது பிறந்ததினம் இன்று அனுஷ்டிப்பு

முதலாம் உலகப்போர் முடிவுக்கு வந்த 1918 ஆம் ஆண்டில், உலகுக்கு தனது அழுகுரலைப் பதிவு செய்தது ஒரு குழந்தை. அந்தக் குரல்தான் பின்னாட்களில், தென்னாபிரிக்காவின் சரித்திரம் படைத்த உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்தது.

ஒன்பது வயதில் தனது தந்தையை இழந்த அந்தச் சிறுவன், ஆடுமேய்த்துக் கொண்டே கல்வி கற்றான். 'சோசா' என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த அந்தச் சிறுவன்தான், அவனது குடும்பத்திலேயே முதன் முதலில் பாடசாலைக்குச் சென்றவனாவான். ஒரு கையில் ஆடு மேய்க்கும் தடி, இன்னொரு கையில் பாடப்புத்தகம் என பாடசாலைப் பருவத்தைக் கடந்தவனால், அவனது கல்லூரிப் பருவத்தை எளிதாகக் கடக்கமுடியவில்லை.

நிறவெறி கொண்ட வெள்ளையர்களால், பூர்வகுடி கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்ட 'அடிமைப் பாடம்'. தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையான பூர்வகுடி கறுப்பின மக்களை பிரிட்டிஷ், பிரான்ஸ், டச்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறிய சிறுபான்மை வெள்ளையர்கள் அடிமை செய்து ஆளத் தொடங்கினர்.

தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்கள் தங்கள் தாய்மண்ணிலேயே சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டனர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டனர். ஒரே நாட்டுக்குள் பயணிக்க வெள்ளையர்களின் அனுமதியும், கடவுச்சீட்டு உரிமமும் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

வாக்களிக்கும் உரிமைகூட பறிக்கப்பட்டு, உள்நாட்டு அகதிகளாக நடத்தப்பட்டனர். கொத்தடிமைகளாக சுரங்கப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தனது கறுப்பின மக்களின் உழைப்பையும் உரிமையையும் சுரண்டிக் கொண்டிருக்கும் வெள்ளையர்களின் ஆதிக்கத்தைக் கண்டுணர்ந்தவனாய், அவற்றுக்கெதிராக கிளர்ந்தெழுந்தான் அந்த இளைஞன்.

1939 ஆம் ஆண்டு, தனது 21ஆவது வயதில், அடிமைப்பட்டுக்கிடந்த தென்னாபிரிக்க இளைஞர்களிடம் விடுதலை உணர்வை விதைத்தான். அவர்களை அமைப்பாய் ஒன்றுதிரட்டினான். "அடிமைத்தனத்துக்கு எதிராக நாம் போராட வேண்டும்" என போர்க்குரல் எழுப்பினான்.

அந்த புரட்சிகர இளைஞன் நெல்சன் மண்டேலாதான் 'தென்னாபிரிக்காவின் காந்தி' என இன்றும் போற்றப்படுகிறார். இன்று அவரது 105 ஆவது பிறந்ததினம்.

'நெல்சன்'என்ற பெயர், மண்டேலா ஆரம்பக்கல்வியை கற்றபோது, பாடசாலை ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர். ஆரம்பக்கல்வியை லோக்கல் மிஷரிப் பாடசாலையில் படித்தவர், 1938 ஆம் ஆண்டு தனது உறவினர் ஜோன்கின் டாபா உதவியுடன் மேல்நிலைப்பாடசாலைக் கல்வியை முடித்தார். பின் 1939 ஆம் ஆண்டு கல்லூரிப் படிப்புக்காக லண்டனில் இருக்கும் 'போர்ட்ஹேர்' (University of Fort Hare) பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். ஏனெனில், அந்த ஒரே பல்கலைக்கழகம்தான் தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தவர்களுக்கு மேலை நாட்டுக் கல்வியை வழங்கியது. அந்தக் கல்லூரியிலும் மாணவர்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கேற்று முன்னின்று நடத்தியதால், பல்கலைக்கழகத்தால் வெளியேற்றப்பட்டார். அதிலும் மனம் தளராத மண்டேலா, தாயகம் திரும்பியதும், அங்குள்ள ஜோகானஸ்பேர்க் பகுதி கல்லூரியில் சேர்ந்து 1941 ஆம் ஆண்டு சட்டப்படிப்பை முடித்தார்.

நெல்சன் மண்டேலா, ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் (African National Congress ANC) 1942 ஆம் ஆண்டு அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அதன் பிறகு மிகத்தீவிரமான களப்பணியில் ஈடுபடத்தொடங்கினார். 1948 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று, தென்னாபிரிக்காவில் ஆட்சிப்பொறுப்பேற்ற புதிய அரசு, கறுப்பின மக்கள் மீதான அடக்குமுறையை மேலும் கட்டவிழ்த்து விட்டது. புதிய சட்டங்களை கொண்டுவந்து மக்களை ஒடுக்கியது. இன மற்றும் நிற அடிப்படையில் பிரித்து, கறுப்பின மக்களைத் தனியாகக் குடியமர்த்தும் முயற்சியில் ஈடுபட்டது.

அரசின் சட்ட முறையிலான அடக்குமுறையை எதிர்த்து, மண்டேலா தனது கல்லூரி நண்பரான ஒலிவர் ரம்போவுடன் இணைந்து African Legal Partnership என்ற கறுப்பின மக்களுக்கான சட்ட அமைப்பை நிறுவினார். இதன் மூலம் அரசால் பாதிக்கப்பட்ட கறுப்பின மக்களுக்கு சட்ட ஆலோசனையும், உதவியையும் வழங்கினார். மறுபுறம் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் சார்பில் பல அறவழிப் போராட்டங்களையும் ஒருங்கிணைத்து, கட்சியை மக்கள் இயக்கமாக உருமாற்றினார். 1950ஆம் ஆண்டு கட்சியின் இளைஞரணிச் செயலாளர் பொறுப்பு கொடுக்கப்பட்டது. மிக இளம் வயதிலேயே, அதிசிறந்த தலைமைப்பண்பைக் கொண்டிருந்த மண்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.அறப்போராட்டங்கள் வாயிலாகவே அடிமைபட்டுக்கிடந்த கறுப்பின மக்களை எழுச்சி பெறச் செய்தார். இனவெறியும், நிறவெறியும் கொண்ட கொடுங்கோல் அரசுக்கு எதிராகப் போராடவும் வழிசெய்தார். நெல்சன் மண்டேலாவின் தொடர்ச்சியான அறபோராட்டங்களால் அதிர்ந்துபோன அரசாங்கம், 1956 ஆம் ஆண்டு அவரை தேசத்துரோக வழக்கில் கைது செய்து சிறையிலடைத்தது. நான்காண்டு வழக்கு விசாரணைக்குப் பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த மண்டேலா, இன்னும் தீவிரமாக மக்கள் மத்தியில்பணியாற்றத் தொடங்கினார்.

அறப்போராட்டத்தை நடத்தி வந்த மண்டேலா, ஆயுத வழிப் போராட்டத்தைக் கையிலெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.1961 ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஒரு அங்கமாக, 'தேசத்தின் ஈட்டி' (Spear of the Nation) என்ற ஆயுத இயக்கத்தைத் தொடங்கினார். அரசாங்கம், மண்டேலாவின் ஆயுதவழி கொரில்லா தாக்குதல்களால் மிரண்டுபோனது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசால் தடை செய்யப்பட்டது. மண்டேலா தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டபடியே, அரசுக்கு எதிரான தாக்குதல்களிலும் ஈடுபட்டு வந்தார். அந்த நிலையில், 1962 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதி மண்டேலாவையும் அவருடன் இருந்த பத்து முக்கிய தலைவர்களையும், மாறுவேடத்தில் நுழைந்த பொலிசார் கைது செய்தனர்.

அதன் பிறகு, 196 4 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். "இனிமேல் போராட்டத்தில் ஈடுபடமாட்டேன், மன்னிப்பு கோருகிறேன்" என்று சொன்னால் உங்களை விடுதலை செய்கிறோம் என அரசாங்க அதிகாரிகள் மண்டேலாவிடம் வலியுறுத்தினர். ஆனால் மண்டேலா அதற்கு அடிபணியவில்லை.

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என நாடு முழுவதும் ஆண்டுக் கணக்கில் போராட்டங்கள் தொடர்ந்தன. உலக நாடுகளெல்லாம் மண்டேலாவின் விடுதலையை வலியுறுத்தின. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அரசும் காலம்தாழ்த்தி வந்தது. அதிருப்தியடைந்த சில உலக நாடுகள் அந்நாட்டின்மீது பொருளாதாரத் தடை விதித்தன. உலக அரங்கில தனிமைப்படுத்தப்பட்ட நாடாக மாறியது. இப்படியான இக்கட்டான சூழலில், தென்னாபிரிக்காவில் ஆட்சி மாற்றம் நடைபெற்று, நெல்சன் மண்டேலாவின் விடுதலையும் நிறைவேறியது. 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி தனது 27 ஆண்டு சிறைவாசத்தை முடித்துக்கொண்டு விடுதலையானார் மண்டேலா.

1993ம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு நெல்சன் மண்டேலாவுக்குக் கொடுக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியிட்ட மண்டேலா வெற்றி பெற்றார். தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தைச் சேர்ந்த முதல் ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா

பதவியேற்றுக் கொண்டார். அவரது அமைச்சரவையில் வெள்ளையர்கள், இந்திய வம்சாவளியினர், கறுப்பினத்தவர்கள் என அனைவருக்கும் இடம் கொடுத்து இனவேற்றுமைகளை நீக்கினார். 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார். அரசியல் சாயமின்றி மக்களுக்கான நலப்பணிகளைத் தொடர்ந்தார்.

நெல்சன் மண்டேலா, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி தனது 95 வது வயதில் மரணமடைந்தார். நெல்சன் மண்டேலாவின் தியாகத்தை போற்றும் வகையில், அவர் பிறந்த ஜூலை 18 ஆம் திகதியை 'உலக நெல்சன் மண்டேலா தினமாக" ஐ.நா. சபை அறிவித்து அனுஷ்டித்து வருகிறது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா ...**



# தமிழ்நாடு ஸ்ரீலஸ்ரீ சிவமோகா மகராஜ் சுவாமிஜி இன்று இலங்கை வருகை

பண்டைய நடைமுறைகள், தெய்வீக ஆற்றல்கள் நிறைந்த தமிழ்நாடு அம்பாள் உபாசகர் ராஜகுரு ஸ்ரீலஸ்ரீ சிவமோகா மகராஜ் சுவாமிகள் வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் 36 ஆவது ஆண்டு ஆடிப்பூர மகோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக இன்று (18.7.2023) இலங்கை வருகின்றார்.

மந்திரம், தந்திரம், யந்திரம் மற்றும் ஔஷதம் பற்றிய அவரது அறிவு இந்த நவீன காலத்தில் இணையற்றது. அவர் தசமஹாவித்யா தேவியிடமிருந்து பிரபஞ்ச சக்தியை தினமும் பெறுகிறார். அடியார்களின் தடைகளையும், எதிர்மறை சக்திகளையும் அகற்றி அருள்பாலிக்கின்றார்.

அனைத்து உயிரினங்களுக்கும் அமைதி மற்றும் நல்லிணக்கம் பற்றிய அவரது போதனைகள் மகத்தானவை. சமய நல்லிணக்கத்தில் நம்பிக்கை உள்ள சுவாமிஜி ஒவ்வொரு செயலிலும் அன்பையும் சகோதரத்துவத்தையும், காருண்யத்தையும் வழங்கி வருகின்றார்.

திட்ட மேலாண்மை மற்றும் மூலோபாய திட்டமிடல் துறைகளில் நிபுணத்துவமிக்கவரான அவர் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வெற்றியை அடைய உதவுகிறார். அவரது தனித்துவமான அணுகுமுறை மற்றும் அறிவுபூர்வமான ஆற்றல் சிக்கலைத் தீர்க்கும் திறன் பெற்றவை. முகம் படித்தல், வாஸ்து மற்றும் அங்க சாஸ்திரம் துறையில் சுவாமிஜி தேர்ச்சி பெற்றவர்.

ராஜகுரு ஸ்ரீலஸ்ரீ சிவமோகா மகராஜ் சுவாமிஜி வேதம், தர்மசாஸ்திரத்தில் ஆழ்ந்த புலமைமிக்கவர். அவரது போதனைகள் ஒளி மற்றும் நம்பிக்கையின் கலங்கரை விளக்கங்கள், சத்தியத்தையும் ஆன்மீக செழிப்பையும் தேடும் அனைவருக்கும் காத்திரமானவை. அவர் ஜுலை 23 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருப்பார். மேலதிக விபரங்களுக்கு 0777318030 தொடர்பு கொள்ள முடியும்

**(விக்கி)**

# நைஜீரிய ஜனாதிபதி முன்னிலையில் leadership விருது பெற்ற அட்டாளைச்சேனை சப்னாஸ்

அட்டாளைச்சேனை பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காதர் முகைதீன் நாசர், அப்துல் குத்தூஸ் பர்சானா தம்பதிகளின் புதல்வரான முஹம்மட் சப்னாஸ் சிறுவயது முதல் கல்வி, கலை, விளையாட்டு என்று பல்வேறு துறைகளிலும் ஆளுமை பெற்றவராக திகழ்ந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை அட்டாளைச்சேனை அக்/அந்நூர் மகாவித்தியாலயத்திலும் உயர்தரத்தை அட்டாளைச் சேனை மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

இவர் பாடசாலையில் கல்வி பயின்ற காலம் முதலே சமூக சேவைகளிலும், நலன்புரி நடவடிக்கைகளிலும் ஆர்வம் காட்டியுள்ளார். இளைஞர் கழகம், விளையாட்டுக் கழகம் போன்றவற்றில் அவர் பதவிகளை வகித்தார்.

இவர் சா.த மற்றும் உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்று மேற்படிப்பிற்காக, புலமைப் பரிசில் ஒன்றினூடாக இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள RK பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

இவரது குறிக்கோள் பாடசாலைக் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற்றும், மேற்படிப்பை தொடர முடியாத மாணவர்களுக்கு வெளிநாடுகளில் புலமைப் பரிசில்களை பெற்றுக் கொடுத்து அதன் வாயிலாக அவர்களின் கல்விக்கு உதவுவதாகும். இதன் வாயிலாக அவர் எமது நாட்டு மாணவர்களுக்கு மட்டுமல்லாது பல வெளிநாட்டு மாணவர்களுக்கும் இப்பணியின் ஊடாக உதவி வருகின்றார். இவரது உதவியை பெற்று நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இந்தியாவின் மார்வாடி, RK,Jain போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்றனர். ஆபிரிக்க நாடுகளில் உள்ள மாணவர்களின் மேற்படிப்புக்காக இவர் அதிக உதவிகளை வழங்கியுள்ளார்.

ஏனெனில் நைஜீரியா, சோமாலியா, உகண்டா, எதியோபியா, கானா, சாம்பியா, சூடான் போன்ற வறிய ஆபிரிக்க நாடுகளில் உள்ள மாணவர்கள் தங்கள் மேற்படிப்புக்காக பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இவர்களுக்கு உதவும் வகையில் இவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவர் மாணவர்களுக்கான புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிப்பதில் தொடங்கி அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வரை தேவைப்படும் அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை வழிநடத்தி வருகின்றார். அவர் இப்பணியை கடந்த 03 வருடங்களாக மேற்கொண்டு வருகின்றார்.

இவ்வாறு சேவை மனப்பாங்கோடு பணியாற்றும் சப்னாஸ் தேசிய ரீதியில் பல்வேறு அமைப்புகளினூடாக இளைஞர்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இவர் 2022 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சர்வதேச அமைப்புகளிலும் இணைத்துக் கொள்ளப்பட்டார். இவர் ஆசிய International model united nation இல் ஊடகத்துறைக்கு பொறுப்பாளராகவும் பாகிஸ்தானில் humanity lovers என்கிற பெயரில் இயங்கி வரும் இளைஞர்களுக்கான தொண்டு நிறுவனத்தில் வெளிநாட்டு விவகார உறுப்பினராகவும் உள்ளார். மேலும் Srilanka unites இல் பிராந்திய ஒருங்கிணைப்பாளராகவும் Eastern youth international model united nation இன் ஸ்தாபக நிர்வாக உறுப்பினராகவும் உள்ளார்.

இவர் ஊடகத்துறையிலும் 4 வருட காலமாக பல பணிகளை ஆற்றிவருகின்றார்.இவர் எழுத்தாளர் ஆவார். இவர் எழுதிய கட்டுரைகள் தினகரன் உட்பட தேசியப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. கடந்த June 24 ஆம் திகதி நைஜீரியாவினால் முகம்மட் சப்னாஸூக்கு leadership விருது வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வானது, நைஜீரியாவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள உயர்கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்காக நடத்தப்பட்ட Quiz போட்டிகளில் வெற்றி பெற்று புலமைப் பரிசில் பெற்றுக்கொண்ட 88 மாணவர்களை கௌரவப்படுத்தும் முகமாக நடைபெற்றது.

## நலிவடைந்த மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டுவதே தனது குறிக்கோள் என்கிறார்

அந்த வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான இந்திய புலமைப் பரிசிலினூடாக இந்திய பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வியை தொடர இந்த மாணவர்களுக்கு வாய்ப்பு பெற்றுக் கொடுத்தமையிற்காக சப்னாஸ் கௌரவிக்கப்பட்டிருந்தார். இந்நிகழ்வானது நைஜீரியாவின் ஜனாதிபதி மற்றும் மாகாண ஆளநர்கள் தலைமையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சப்னாஸ் கலந்து கொள்ளாவிடினும் அவருக்கான கௌரவம் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

United Organization for Education and Sports Development Nigeria எனும் அமைப்பினூடாகவே இந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். எதிர்காலத்திலும் இந்த அமைப்பினூடாக நைஜீரிய மாணவர்களுக்கு உதவவுள்ளதாக சப்னாஸ் குறிப்பிட்டார்.



தான் பொருளியல் துறையில் தனது மேற்படிப்பைத் தொடர்கின்றபோதிலும், அது சார்ந்த தொழிலில் ஈடுபடுவதில் தனக்கு விருப்பம் இல்லை எனவும், மாணவர்களுக்கான இவ்வாறான சேவைகளை செய்வதே தனது பெருவிருப்பம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தனது சேவைகளினூடாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்விக்குப் பொறுப்பான அமைப்புகளில் இணைந்து மாணவர்களுக்கு மென்மேலும் உதவிகள் செய்வதே தனது குறிக்கோள் என்று அவர் கூறினார். அத்துடன் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஆபிரிக்க நாடுகளில் உள்ள மாணவர்களுக்கு தனது சேவையை வழங்க உறுதி பூண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**றிசாத் ஏ. காதர்...**
*(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)*

# மன்னார் மாவட்டத்தில் நேற்று ஆடிப்பிறப்பு விழா கொண்டாட்டம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (17) திங்கட் கிழமை (17) காலை 9.30 மணியளவில் ஆடிப்பிறப்பு விழா,கொண்டாடப்பட்டது. மன்னார் மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் கொண்டாடப்பட்ட இந்த ஆடிப்பிறப்பு விழாவுக்கு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒத்தாசை வழங்கியது.

இந்நிகழ்வில், நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் படத்திற்கு அரசாங்க அதிபர் மலர் மாலை அணிவித்தார்.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுமுறை' என்ற கருத்தில் மாவட்ட செயலக அலுவலர்களால் பாடல் இசைக்கப்பட்டது. மடு பிரதேச செயலகதத்தின் அபிவிருத்தி அலுவலர் மனோகராசா பிரதீபனால் 'ஆடி மாத்தின் சிறப்பு' என்ற தலைப்பில் சிறப்ப சொற்பொழிவு இடம்பெற்றதுடன் மன்னார் அரசாங்க அதிபரும் இங்கு உரையாற்றினார்.



யாழ்ப்பாணத்தில் அண்மையில் வட மாகாண ரீதியாக நடைபெற்ற வெசாக் பக்தி கீதத்தில் பங்குபற்றிய மன்னார் மாவட்ட அலுவலர்களுக்கு 'மெக்கரை சான்றிதழ்' வழங்கும் நிகழ்வுடன் சமுர்த்தி 'ரன்வீமன' வீடமைப்பு திட்ட பயனாளிகள் சிலருக்கு முதல் கட்டமாக ரூபா 150000 சாசோலைகளும் வழங்கப்பட்டன.அத்துடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் மிகவும் சிறப்பான முறையில் கலாசார மற்றும் சமூக சேவையில் ஈடுபட்டுவரும் மன்னார் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனுக்கு"கலைச் சேவகன்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆடிக்கூழும் இங்கு பரிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## தங்கச் சங்கிலியை பறித்தெடுக்க முயன்றோர் மீது பெண் தாக்குதல்

**யாழ்.விசேட நிருபர்**

சங்கிலியை அறுக்க முற்பட்ட கொள்ளையர்களை

தனித்து நின்று தாக்கிய பெண்,ஊரவர்களின் உதவியுடன்,

கொள்ளையர்களில் ஒருவரை மடக்கிப்பிடித்தார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்ணாகம் வீதியில் நேற்று (17) இச்சம்பவம் நடந்தது.இவ்வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்ணின்

தங்கச்சங்கிலியை பறிக்கும் நோக்குடன் இருவர் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்தனர்.தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை,பின்னாலிருந்த இளைஞனை அப்பெண் பிடித்து இழுத்துள்ளார். இதையடுத்து மோட்டார் சைக்கிளிலிருந்த இருவரும் கீழே விழுந்துள்ளனர். சைக்கிளை ஓட்டி வந்தவர் ஓடித்தப்பிய நிலையில்,பெண்ணின் பிடியிலிருந்து தப்பியவர் அருகிலிருந்த பற்றைக்காட்டுக்குள் ஒளிந்துள்ளார். அவ்விடத்தில் கூடிய ஊரவர்கள் மேலங்கியின்றி பற்றைக்காட்டுக்குள் மறைந்திருந்த கொள்ளையரை மடக்கி பிடித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கனேடிய உயர்ஸ்தானிகருடன் சிறீதரன் எம்,பி சந்தித்து பேச்சு

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று (17) பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனைச் சந்தித்தார்.இச்சந்திப்பு பாராளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றது. இலங்கைத் தமிழர் விடயத்தில் கனடா வழங்கி வரும் ஆதரவுகளுக்கு நன்றி தெரிவித்த ஸ்ரீதரன் எம்பி,எதிர்காலத்தில் இந்த ஆதரவுகள் அதிகம் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.கனடா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை மேலும் வலுச்சேர்க்கும் வகையில் உழைப்பதன் அவசியம் பற்றியும் இவ்விருவரும் கலந்துரையாடினர்.

# அமைச்சர் நஸீர் அஹமட் மன்னிப்புகோர வேண்டும்

**தலைமன்னார் விஷேட நிருபர்**



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

தொடர்பில் அமைச்சர் நஸீர்அஹமட் வெளியிட்ட கருத்துக்களை, உடன் அவர் விலக்கிக் கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுபப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அமைச்சராக இருந்து கொண்டு நஸீர்அஹமட் இவ்வாறு விமர்சித்திருக்க கூடாது.இது பெரிய தவறு.தவறை உணர்ந்து அவர்,தனது கருத்தை வாபஸ் பெற வேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நாட்டின் எந்த இடத்திலும் வேலை செய்யத் தகுதியுடையவர்கள். அரசாங்கத்திலிருந்து கொண்டு ஒரு ஆளுநரை பொது வெளியில் ஏளனம் செய்த அமைச்சருக்கு எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறான கருத்துக்களை பொதுவெளியில் சொல்வது தவிர்க்கப்படல் அவசியம். அவரது கருத்துக்கள் அவரை,மோசமான சிந்தனையுடையவராகவே காட்டியிருக்கிறது. இதனால்,அமைச்சரை மக்கள் ஏளனமாக நோக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

## தற்கொலைக்கு முயன்ற தந்தை பொலிஸார் தலையிட்டு மீட்பு



**பருத்தித்துறை விசேட நிருபர்**

உடம்பில் பெற்றோலை ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்தவரை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

தனது மகளை,அயல் வீட்டார் இழிவாகப் பேசியதற்கு

எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவர்,இவ்விபரீத முயற்சியில்

இறங்கினார்.இதை அவதானித்த பொலிஸார் விரைந்து செயற்பட்டு அவரைக் காப்பாற்றினர்.

ஆவரங்கால் சர்வோதயா பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

காதல் விவகாரத்தால், தனது மகளை தரக்குறைாவாகப் பேசிய இளைஞனின் குடும்பத்தாருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால்,கவலையடைந்த தந்தையாரே இம்முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்டார்.

# அமரர் சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு விழா



தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவு விழா எதிர்வரும் வியாழக்கிழமை (20) இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு, அன்றைய தினம் மாலை 3 மணிக்கு வடமராட்சி கரவெட்டி சம்பந்தர் கடையடி

மகேசன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் தலைமையில்

நடைபெறும் இவ்விழாவில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர்

பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், சிவசிதம்பரத்தின் மகள் திருமதி நிராஞ்சலி தேவராஜ் ஆகியோர் உரையாற்றுவர்.தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி

விழாவில் கௌரவிக்கப்படுவார். அமரர் சிவசிதம்பரத்தின் அரசியல் வாழ்வு ஆவண நூலொன்றும் இதில், வெளியிடப்படுவதுடன், கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# அநுராதபுரம் மாவட்ட பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராய்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அலுவலக விவகாரங்களை மேலும் திறமையாகவும் துல்லியமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதே நோக்கமென மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் உதவிப் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களின் உதவி பிரதேச செயலாளர்களும் இந்த ஆய்வில் கலந்து கொண்டிருந்தனர். அங்கு இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவின் சகல பிரிவுகளும் குழுக்களாக அவதானிக்கப்பட்டன.



உரிய ஆய்வுகளுக்குப் பிறகு, ஒவ்வொரு குழுவும் அந்தந்த துறைகளில் உருவாக்க வேண்டிய நிலைமைகள் மற்றும் பலவீனங்கள் குறித்து மாவட்ட செயலாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்கும். இச்செயற்பாட்டின் ஊடாக ஒவ்வொரு பிராந்திய செயலகத்திலும் இருக்கும் தனித்துவமான கூறுகளை மற்ற பிராந்திய செயலகங்களுக்கு மாற்றுவதற்கான பின்னணியை வழங்குவதற்கான வாய்ப்பும் இதன் கீழ் உருவாக்கி கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கள விஜயத்தில் அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர்களான சந்தியா அபேசேகர, திரு. ஷாமிலா விக்கிரமாராச்சி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனநந்தா, மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திரு.யு.எஸ். அருணரவி, உட்பட அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் குழுவினர் இதன் போது கலந்து கொண்டனர்.



களனி பல்கலைக்கழகத்தின் பாலின வேறுபாடுகள் தொடர்பான ஆய்வுக்கான சர்வதேச மாநாடு அண்மையில் ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் விஷேட அதிதியாக கலந்துகொண்ட சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுப பஸ்குவல் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் ஆய்வாளர் ஒருவருக்கு விருது வழங்குவதையும் படங்களில் காணலாம். படங்கள்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

ஜேர்மனி மக்களின் நிதியுதவியில்;

# பேருவளை அரச வைத்தியசாலைக்கு உபகரணத்தொகுதி அன்பளிப்பு




பேருவளை நல்லஹேன அரசாங்க வைத்தியசாலைக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான குழந்தைகளைப் பரிசோதிக்கும் " STETHOSCOPE (Children)" உபகரணம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி, மெய்ன் கிங்ஸிங் மாவட்ட மக்களின் நிதியுதவியில் அன்பளிப்பு செய்யப்பட்ட மேற்படி உபகரணத்தொகுதி வழங்கும் நிகழ்வு பேருவளை சீனன் கோட்டை இர்ஸான் மொஹமட் தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டில் அண்மையில் நல்லஹேன வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜேர்மனி முன்னாள் மாவட்ட அமைச்சர் மெதியஸ் ஸச் வைத்தியசாலை பொறுப்பாளரிடம் வைபவரீதியாக உபகரணத்தை கையளித்தார். மேலும் பேருவளை நகர சபை பிரிவிலுள்ள ஐந்து அரச சிகிச்சை நிலையங்களுக்கும் இவ்வுபகரணத்தொகுதிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டாளர் இர்ஸான் மொஹமட் தெரிவித்தார்.

# முன்னாள் எம்.பி அலவியின் மறைவுக்கு ரிஷாட் அனுதாபம்

குருநாகல் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான ஏ.எச்.எம்.அலவியின் மறைவு தனக்கு மிகவும் வேதனை தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"குருநாகல் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராகி வரலாற்றில் தடம்பதித்த ஏ.எச்.எம்.அலவி, முஸ்லிம்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களாலும் அதிகம் நேசிக்கப்பட்டார்.

பம்மண்ணவை பிறப்பிடமாகக் கொண்ட அவர், மக்களின் குறைகளை தீர்ப்பதற்காக பல்வேறு வழிகளில் பாடுபட்டவர். குருநாகல் மாவட்டத்தில் குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான பல நல்ல பணிகளை மேற்கொண்டார்.

அத்துடன் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவைப் பேணுவதற்கு ஒரு பாலமாகச் செயற்பட்டார்.

1990 ஆம் ஆண்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் குருநாகல் மாவட்டத்திற்கு வந்தபொழுது, அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மின்சாரம் உள்ளிட்ட இன்னோரன்ன வசதிகளைச் செய்துகொடுத்து அம்மக்களுக்கு உதவியதுடன், இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.



மேலும், குருநாகல் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுப்பதில் ஆர்வங்காட்டியவர்.

நற்பண்பாளரான அல்ஹாஜ் அலவி அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு இழப்பை தாங்கக்கூடிய மனதைரியத்தையும் பொறுமையையும் வழங்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தென் மாகாண அறிவுக்களஞ்சிய போட்டியில்;

# காலி, கட்டுகொடை உஸ்வதுல் ஹஸனா சம்பியனாக தெரிவு

**வெலிகம தினகரன் நிருபர்**

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் நடாத்தி வரும் அறிவுக்களஞ்சிய போட்டித் தொடரின் தென்மாகாண மட்டப்பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை (16) மாறை / கிரிந்தை முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலைகள் இதில் கலந்து கொண்டன.

இதில் காலி கட்டுகொடை உஸ்வதுல் ஹஸனா முஸ்லிம் மகா வித்தியாலயம் இறுதி சுற்றில் வெற்றியீட்டி தென் மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இரண்டாம் இடத்தை ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையும் மூன்றாம் இடத்தை மாத்தறை மீயல்லை அல்மினா மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

தென் மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ள காலி கட்டுகொடை உஸ்வதுல் ஹஸனா மகாவித்தியாலயம் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிதாக மதுபானசாலைகள் திறப்பதற்கு எதிராக விழிப்புணர்வூட்டும் ஆர்ப்பாட்டம்

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கென புதிதாக 10 மதுபானசாலைகள் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் ஆர்ப்பாட்டம் நேற்று (17) வவுணதீவு பிரதேச செயலகத்திற்கு எதிரே நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் தி.சரவணபவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு எதிர்ப்புக் கோசமெழுப்பினர்.

எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்த்து ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில்நடைபெற்றஆர்ப்பாட்டத்தில் ஏழை மக்களை சுரண்டாதே, மதுபானசாலை எமக்கு வேண்டாம், மதுவால் தமிழர்களை அழிக்கத் திட்டமா, மண்முனை மேற்கை அழிக்க 3 மதுக் கடைகளா போன்ற வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோசமெழுப்பினர். இறுதியில் மதுபானசாலைகளைத் திறக்க வேண்டாம் எனக் கோரி பொதுமக்களால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட மகஜரை ஆர்ப்பாடக்காரர்கள் வவுணதீவு உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரனிடம் கையளித்த பின்பு கலைந்து சென்றனர்.

# சாய்ந்தமருதில் வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்த தோணா சுத்திகரிப்பு

வெள்ள அனர்த்த அபாய நிலைமையை கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், கல்முனை மாநகர சபை, சாய்ந்தமருது பிரதேச செயலகம், சம்மாந்துறை பிரதேச சபை ஒருங்கிணைந்து சாய்ந்தமருது தோணாவை சுத்திகரிப்பு செய்யும் வேலைத்திட்டத்தை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்தது.

2019 ஆம் ஆண்டிற்கு பின்னர் 3 வருடங்களாக எவ்வித புனரமைப்புமின்றி தோணா காணப்பட்டதுடன் வெள்ள அனர்த்தம், சுற்றுச்சூழல் மாசடைதல் போன்றவற்றால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.இதனை கட்டுப்படுத்தும் முகமாக அண்மையில் நடைபெற்று முடிந்த பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் சார்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இத் தோணா சீர் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் நேரடி கண்காணிப்பில் இப்பணி முன்னெடுக்கப்படுகிறது.



இவ்வேலைத் திட்டமானது இரு கட்டங்களாக நடைபெற்று வருவதுடன் இத்தோணாவில் தேங்கியுள்ள சல்பீனியாக்களும் பொது மக்களினால் வீசப்பட்டு நிரம்பியுள்ள திண்மக்கழிவுகளும் முதல்கட்டமாக கனரக வாகனங்களின் உதவியுடன் தோண்டி அள்ளப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.பின்னர் தோணாவின் இரு மருங்கிலும் ஒடுங்கி காணப்படுகின்ற நிலையில் சீரான தோணாவினை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# மட்டு.மாவட்டத்தில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பிரசாந்தி லதாகரன் வழி காட்டலின் கீழ் வலையரவு சுகாதார பரிசோதகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டது.

திமிலைதீவு, புதூர், கிராம சேவகர் பிரிவில் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பாடசாலைகள், ஆலயங்கள், பொது நிலையங்கள், வீடுகள், கிணறுகள் என்பன ஆய்வுக்கூட்படுத்தப்பட்டதுடன் நீர் தேங்கக்கூடிய யோகட் கப், பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி போத்தல்கள், சிரட்டைகள், தகரப் பேணிகள் போன்ற ஏராளமான கொள்கலன்களை சேகரிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு பரவும் வகையில் காணப்பட்ட இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர்,கிராமசேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முப்படையினர்,பொலிசார், பொது அமைப்பினர் என ப் பலர் கலந்து கொண்டனர்.




கல்முனை கல்வி வலய பாடசாலைகளிலுள்ள சுற்றாடல் முன்னோடி கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கத்திற்காக தயார்படுத்தற்கான விரிவுரைகளும், கலந்துரையாடலும் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். படம் மாளிகைக்காடு குறூப் நிருபர்

# அம்பாறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம் சனிக்கிழமை அம்பாறை தெஹிகொல்ல வளவு வாடி வீட்டு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நான்கு வருடங்களின் பின் இடம்பெற்ற இப்பொதுச்சபை கூட்டத்தின் போது மூவினங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்கள் நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர். இதன் தலைவராக தொடர்ந்தும் வசந்த சந்திர பாலவும், உப தலைவராக ஏ.எல்.எம் சலீமும், செயலாளராக ரவீந்திர மெத்தகெதரவும், உபசெயலாளராக தயானந்த அதிகாரியும், பொருளாளராக தொடர்ந்தும் சமன் மாணிக்க ஆராச்சியும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய செயற்குழு உறுப்பினர்களாக ஏ.கே.ஜௌபர், வி.சுகிதகுமார், அச்சல உபேந்திர, எஸ்.எல். நிஷார், யூ. விஜேசிங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# 'நாதம் விருது' வழங்கல் விழாவில் தினகரன் பிராந்திய ஊடகர்களுக்கு கௌரவம்



**கல்லடி குறூப்நிருபர்**

பல்துறை ஆளுமையாளர்களை கௌரவிக்கும் 'நாதம் விருது' வழங்கல் விழா நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

BATTINAATHAM பிரதம ஆசிரியர் தர்மலிங்கம் தயாபரன் தலைமையில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா கலந்துகொண்டதுடன் நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, மட்டக்களப்பு பெரிய பள்ளிவாசல் மௌலவி நியாஸ், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி. பாரதி கென்னடி உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபரினால் BATTINAATHAM செயலி அங்குரார்பணம் (App Launch) செய்துவைக்கப்பட்டது.

இதன்போது சமூக மேம்பாட்டை கருத்திற் கொண்ட கல்வி செயற்பாடுகள், பாரம்பரிய கலை மற்றும் கலாசாரம், பாரம்பரிய வைத்தியம், மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைக்கு எதிரான சமூகம் சார் செயற்பாடுகள், நல்லிணக்கம் சார் சமூக செயற்பாடுகள், சூழல் விழிப்புணர்வு சார் சமூக செயற்பாடுகள், விளையாட்டு துறைசார் சமூக செயற்பாடுகள், சமூகப் பொறுப்புடன் கூடிய சமூக வலைத்தள பாவனை, சமூக அக்கறை கொண்ட ஆன்மீக செயற்பாடுகள், பதவி தாண்டிய சமூக அக்கறை, தன்னலமற்ற தொண்டர் சேவை ஆகிய துறை சார்ந்து சமூகத்திற்காக சேவையாற்றிய பல்துறை ஆளுமையாளர்களாக அடையாளப்படுத்தப்பட்ட பல்துறைசார் ஆளுமையாளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன், விசேடமாக சமூக அக்கறை கொண்டு ஊடக செயற்பாடுகள் ஊடாக சமூகத்திற்காக சேவையாற்றி வரும் ஊடகவியலாளர்கள் பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன், கௌரவிக்கப்பட்டதில் Lake house ஊடகவியளாளர்கள் 10 பேர் அடங்குவதும் குறிப்பிடத்தக்கது.

# மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையில் தினகரன் ஹஜ்பெருநாள் விளையாட்டு போட்டி

## பெருமை கொள்ளும் அதிபர் எஸ்.ஆர் குமார்



**பேருவளை விசேட நிருபர்**

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு பூர்த்தி முன்னிட்டு ஹஜ்பெருநாள் விளையாட்டு போட்டி பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மைதானத்தில் நடாத்தப்படுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன் என அதிபர் எஸ்.ஆர் குமார் நேற்று தெரிவித்தார்.

பாடசாலையில் நடைபெற்ற காலைக் கூட்டத்தின் போது அவர் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க, பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது விழா ஏற்பாட்டாளரும் பிரபல சமூக சேவையாளருமான பாஸி ஸூபைர் தினகரன் பத்திரிகையின் 91 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள சிறுவர்களுக்கான போட்டிகள் மற்றும் உதைப்பந்தாட்ட, கிரிக்கெட் போட்டிகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

பாடசாலை அதிபர் எஸ்.ஆர் குமார் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டின் தேசிய பத்திரிகையான தினகரன் பத்திரிகையின் அலப்பெரிய பணிகள் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் எடுத்துக் கூறினார்.

தினகரன் பத்திரிகையின் 91 ஆவது வருட பூர்த்தி விழாவை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க பாடசாலையின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக குறிப்பிட்டார். அத்தோடு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் அனைவரும் இந்த விழாவின் வெற்றிக்காக பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பாடசாலை பிரதி அதிபர் எம்.எஸ்.எம் நப்ஹான், விழா ஒருங்கிணைப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பீ.எம் முக்தார் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# ஈதல்வட்டுனுவெவ முஸ்லிம் ம.வியில் அடிக்கல் நாட்டு விழா











கலென்பிதுனுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட ஈதல்வட்டுனுவெவ முஸ்லிம் மஹா வித்தியாலத்திற்கான மாடி வகுப்பறை கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் அகுரார்ப்பண நிகழ்வு வித்தியாலய அதிபர் வை.தௌபீக் தலைமையில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இக் கட்டடத்தை அல் ஹிமா நிறுவனத்தின் பணிப்பாளர் நூருல்லா (naleemi) அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க குவைட் அரசின் அனுசரனையுடன் அந்நாட்டின் தனவந்தர் ஒருவரினால் பண உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், குவைட் தூதரகத்தின் பிரதிநிதி பிர்தவ்ஸ் (naleemi) அல்ஹிமா நிறுவனத்தின் பணிப்பாளர் நூருல்லா (naleemi ) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# 'அருவியாள்' கிராமிய சந்தை திறப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் பங்காளர் நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் வாகரைப் பிரதேச பெண்களின் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும் மற்றும் மீனவப் பெண்களின் சுயதொழில் முயற்சியினை வலுப்படுத்தும் முகமாகவும் வாகரைப் பிரதேச பெண்களுக்கென்று பிரத்தியேகமான கிராமிய சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதன் திறப்பு விழா (15) திருமலை வீதி, மாணிக்கபுரம், வாகரையில் அமைந்துள்ள வாகரை பிரதேச சபை சந்தைக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான திருமதி மயூரி ஜனன் தலைமை தாங்கினார்.

இவ் விற்பனை நிலையத்தில் குளத்து கருவாடு உட்பட அனைத்து கருவாடு வகைகளும், தேன், கிராமிய பாரம்பரிய உணவுகள்,பனம்பொருள் உற்பத்தி பொருட்கள், மற்றும் நாட்டு முறிவு எண்ணெய் வகைகள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் மணற்சேனை படுகொலையின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு



**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

மூதூர் பெரியவெளி, மணற்சேனை கிராமத்தில் கடந்த 1986 ஆம் ஆண்டு ஆடி மாதம் பதினாறாம் திகதி இடம் பெற்ற மனிதப் படுகொலையின் 37 ஆவது நினைவேந்தல் மணற்சேனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடும், ஈகைச் சுடர் ஏற்றல், அஞ்சலி நிகழ்வும் நடைபெற்றன.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் கலந்தது பொதுச்சுடரினை ஏற்றி வைத்ததுடன். இலங்கையின் வடக்கு, கிழக்கில் இதே ஆண்டில் தமிழ் மக்களை இலக்குவைத்து இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் பல்வேறு கிராமங்களில் இடம்பெற்றிருந்தமை தொடர்பான நினைவுரையினையும் நிகழ்த்தியிருந்தார்.

## முத்தங்கள்

என் தந்தையின் நெற்றியில்
நான் முத்தமிட்டேன்.
முதலும் கடைசியுமாக...
என் தந்தையோ...
அமைதியாக
மிகவும் அமைதியாக
அதே புன்னகை.
அதே அமைதி.
ஆனால்.....?
பூக்கடைக்கு விளம்பரமா?
எங்கள் கலைவாதிக்கு அறிமுகமா?
என்று கேட்டவர்கள் எல்லாம்
விக்கித்துப் போனார்கள்.
கலைவாதி எங்கே?
என் தந்தையின் நெற்றியில்
நான்
தொடர்ந்தும் முத்தமிட்டேன்.
நினைவு தெரிந்த நாட்கொண்டு
முதலும் கடைசியுமாக.
மணவறையில் கை பிடித்துக் கொடுத்து
என்னை முத்தமிட்ட தந்தையை
நான்
மண்ணறைக்கு அனுப்ப முத்தமிட்டேன்;
முதலும் கடைசியுமாக
என்னை அள்ளியணைத்து வளர்த்த
என்னருமை தந்தையின் கைகளை
எடுத்தணைக்க நினைத்தேன்–
முடியவில்லை
கைகள் குளிர்ந்து விட்டன.
என் தந்தையின் நெற்றியில் மீண்டும்
முத்தமிட்டேன்.
முதலும் கடைசியுமாக
அவரது அன்பான இதயம் போன்று
அதுவும் குளிர்ந்திருந்தது.
என் இதயம் வெடித்து விட்டது.
எங்கே கலைவாதி...?
காலப்போக்கில்
அவர் புகழ்
சரித்திரமாகி, சகாப்தமாகி, வரலாறாக
மிளிரலாம்.
ஆனால் எனக்கோ...
என்றென்றும் அது ஆறாத ரணமாக,
கணமாக
என் மௌத்து வரை ஈடில்லா இழப்பாக
வாப்பா; என் வாப்பா
உங்களின் உயிர் நான்
எப்படி இனிமேல் உயிர் வாழ்வேன்
வேரற்ற மரமாகி
ஒருமுறை எனக்காக
எழுந்து வாருங்கள் வாப்பா
நான் உங்களுடனேயே வந்து விடுகிறேன்
நிரந்தரமாகி உங்கள் மகளாக
இல்லையில்லை.
உங்கள் அன்பு மகளாக
நஸ்வா கலீலாகி
பாத்திமா நஸ்வா கலீல்

## இலங்கைத் துறைமுக அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**மெஷின் ஷொப் ஓவர்ஹெட் கிரேனுக்கான ஈ செயின் மின்சார வழங்கல் ஏற்பாட்டை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்**

**(INSTALLATION, TESTING AND COMMISSIONING OF E CHAIN POWER SUPPLY ARRANGEMENT FOR MACHINE SHOP OVERHEAD CRANE.)**

**கேள்வி இல: EW 13/EL/2023/102**

1. மெஷின் ஷொப் ஓவர்ஹெட் கிரேனுக்கான ஈ செயின் மின்சார வழங்கல் ஏற்பாட்டை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவை வியாபாரத்தில் ஆகக்குறைந்தது கடந்த மூன்று வருடங்களுக்காவது இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (மின்னியல்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 (வரிகள் அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், 2023-07-18ஆம் திகதியிலிருந்து 2023-08-09ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (மின்னியல்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. 2023-08-10ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் சமூகத்தில் அதே முகவரியில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் 60,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (மின்னியல்)**
**மின்சார பொறியியல் பிரிவு**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு 01**
**தொலைபேசி இல: 011 2483081**
**தொலைநகல் இல: 011 2424309**

**விவசாயத் திணைக்களம்**
**தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையம், கன்னொருவ**

## ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் அந்நிறுவனத்திற்காக Plant Growth Incubator ஆய்வுகூட உபரகணங்களை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன

சகல வழங்குநர்களும் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருப்பதுடன் மேற்படி பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது பற்றிய விபரங்களை கேள்விப் படிவம் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றை கன்னொருவவில் அமைந்துள்ள தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பதாரிகளுக்கு மீளளிக்கப்படாத ரூ. 3000.00 கட்டணத்தை 2023.07.19 முதல் 2023.08.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பி.ப. 3.00 வரை விவசாயத் திணைக்களத்தில் தலைமையகத்தில் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கன்னொருவவில் அமைந்துள்ள தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்திற்கு சமர்ப்பித்த பின்னர் குறித்த கேள்வி ஆவணங்கள் மற்றும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சகல கேள்விகளும் பொறியிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்திற்கு Plant Growth Incubator இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்' என்று குறிப்பிட்டு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையம், த. பெ. 59, கன்னொருவ, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கன்னொருவ தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்தின் தரை மாடியில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2023.08.08 மு.ப. 10.00 இற்கு முடிவடைந்ததுடன் உடனடியாக கன்னொருவவில் அமைந்துள்ள தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விகளைச் சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ள தொகையில் கேள்விப் பிணை முறியுடன் (விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பெற்றுக் கொண்ட) அல்லது விவசாயத் திணைக்களத்திற்கு காசு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன சமர்ப்பித்தல் வேண்டும். ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 081-2388494ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்.**
**பிரதேச பெறுகைக்குழு,**
**தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலையம்,**
**இல. 59, கன்னொருவ, பேராதனை.**

## இலங்கை வங்கி

### உடுபத்தாவ பிரதேசத்தில்

**ATM இயந்திரத்தை நிறுவதற்குப் பொருத்தமான காணி அல்லது கட்டடமொன்று குத்தகை அடிப்படையின் கீழ் தேவையாகவுள்ளது**

**உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- ஆகக்குறைந்த குத்தகைக் காலம் 10 வருடங்கள்
- மேற்கூறப்பட்ட அமைவிடத்திலிருந்து 500 மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக்கூடியதாகவும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதியும் இருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மூன்று முதன்நிலை மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் தரைப் பரப்பளவு 240 அடிகளாக (20'x20') இருத்தல் வேண்டும் என்பதுடன் கட்டடத்திற்கான காணி 91 அடிகளாக (7'x13') இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகளையும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடமேல் மாகாணம் இலங்கை வங்கி உடுபத்தாவ பிரதேசத்தில் ATM இயந்திரத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான காணி அல்லது கட்டடம்"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்**
**(வடமத்திய மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**இல. 18, மிஹிந்து மாவத்தை, குருநாகல் 60000.**
**தொலைபேசி இல. 037-2223618, 037-2222420, 037-2223401**
**தொலைநகல்: 037-2223619 மின்னஞ்சல்: bocnwp@boc.lk**

## தங்க ஆபரண ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பொலன்னறுவை பிராந்திய பிரதான அலுவலகத்துக்குரிய பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 2022.03.31ஆந் திகதி வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 2023.08.04ஆந் திகதி வரை அடகு மீட்டுக் கொள்ளப்படாத அடகுப் பொருட்கள் கீழ்வரும் திகதிகளிலும் நிலையங்களிலும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஏல விற்பனையானது மறு அறிவித்தல் இன்றி வங்கியின் தற்றுணியின் பிரகாரம் இரத்துச் செய்தல் அல்லது பிற்போடுதல், ஒன்றிணைத்து நடாத்துதல் அல்லது இத்தகைய நடவடிக்கையொன்றை மேற்கொள்ளும் உரிமை வங்கி சார்ந்ததாகும்.

மு.ப. 9.00 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பிக்கப்படும் என அறியத் தருகின்றோம்.

| ஏல விற்பனை திகதி | 2023.8.05/06 | 2023.08.05/06 |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் வளாகம் | பொலன்னறுவை பிரதான கிளை | தெஹிஅத்தகண்டிய கிளை |
| தங்க ஆபரணங்களுக்குரிய கிளைகள் | பொலன்னறுவை, ஹிங்குரக்கொடை, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரம், பக்கமூன, தம்பால | அரலகன்வில, வெலிகந்தை, தெஹிஅத்தகண்டிய |
| தங்க ஆபரணங்களுக்குரிய சேவை நிலையங்கள் | கதுறுவெல, பொலன்னறுவை வைத்தியசாலை வளாகம், தியசென்புர, லங்காபுர, ஜயந்திபுர, தியபெதும | மன்னப்பிட்டி, செவனபிட்டிய, சிரிபுர, சந்துன்புர |

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய பிரதான அலுவலகம்,**
**புதிய நகரம், பொலன்னறுவை.**
**027-2224404/2225760**

PEOPLE'S BANK
Pride of the Nation

**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் துறைமுக அலுவலகத்திற்காக நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கலன் வழங்குதல்

இலங்கைத் துறைமுக அதிகார சபையில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்புக்குரித்தான அலுவலகத்திற்காக நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கலனை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் **2023 ஜுலை 18ஆம் திகதி முதல் 2023 ஜுலை மாதம் 31ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி** வரைக்கிடையிலான காலத்தில் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலகத்திலிருந்து தொடர்புடைய விலைக்கோரல் ஆவணங்கள் மற்றும் விபரக்குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம். இதன்பொருட்டு மீளளிக்கப்படாத **2,000.00 ரூபா** கட்டணத்தை அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு நகல்களில் (02) தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் **"மூலப் பிரதி"** மற்றும் **"நகல் பிரதி"** எனக் குறிப்பிட்டு, வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அதன்பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து **2023 ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணி** அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் **தலைவர் (பெறுகைக் குழு), கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் அமைந்துள்ள இந்த அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"துறைமுக அலுவலகத்திற்காக நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கலன் வழங்குதல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைக்கோரல் நிறைவடைந்தவுடன் **கொழும்பு-05, நாராஹென்பிட்டி, நாவல வீதி, இல. 177 எனும் இடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தலைமை அலுவலகத்தில் 2023 ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்த தரப்பினர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் உரித்தாகும்.

உங்களின் சகல தகவல்களையும் அதிகார சபைக்கு பணம் செலுத்திய பின் வழங்கப்படும் எமது விலைக்கோரல் ஆவணத்தின் பிரகாரம் சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என்பதுடன் இதற்குப் புறம்பாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளலாம்.

- **0112554006 / 0112554373 (நீடிப்பு 101, 102, 202)**
- **0112554247 / 0112554534**

**தொலைநகல், மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.**

பொருத்தமான வழங்குநரை தெரிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை அதிகார சபையின் பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,**
**இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

**MY. NO. - LD/S/SLPA/2023/07/PC-04 (LD/S/T/451/2022/SLPA)**

கொழும்பு துறைமுகத்தின் JCT நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள அழியக்கூடிய சரக்குகளை கொள்வனவு செய்து அகற்றிக் கொள்வதற்காக 2023.07.19ஆம் திகதி 10.00 மணிக்கு பண்டாரநாயக்க கப்பல் துறையின் நலன்புரி கட்டடத்தில் இந்த பகிரங்க ஏல விற்பனைக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| S.NO | VESSEL & DATE | CONTAINER NO. | DESCRIPTION |
|---|---|---|---|
| 01 | EVER ULYSSES OF 29.11.2022 | VSBU2083773,TEMU2864131(02X20') | RED LENTILS |

இறக்குமதியாளர்களினால் அகற்றிக்கொள்ளாத இரு சிவப்பு பருப்பு கொள்கலன்களை 2023.07.19 ஆம் திகதி 10.00 மணிக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பண்டாரநாயக்க கப்பல் துறையின் நலன்புரி கட்டடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

ஏலமிடும் இடத்திற்கு நுழைவதற்கான அனுமதிச்சீட்டை ஏலத்திற்கு பங்கேற்பவர்களில் ஒருவருக்கு 1,000 ரூபா மற்றும் பெறுமதி சேர் வரியை செலுத்தி, கெனல் நிலையம். இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு 01 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவை வழங்கும் பிரிவின் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2023.07.17ஆம் திகதி 08.30 மணி தொடக்கம் 2023.07.18 ஆம் திகதி 12.30 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

2023.07.18ஆம் திகதி 13.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை துறைமுகத்திற்குள் JCT நிலையத்தில் குறித்த பொருட்களை பரீட்சித்துப் பார்க்க முடியும்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் மூலம் மீளளிக்கப்படும் 200,000 ரூபா பிணை தொகையை வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு, அந்த பிணை தொகையை வைப்புச் செய்தவருக்கு மாத்திரம் ஏல விற்பனைக்கு பங்கேற்க முடியும்.

ஏல விற்பனை முடிவுற்ற உடன் வெற்றிகரமான விலைமனுதாரருக்கு வழங்கப்படும் கடிதம் அன்றைய தினத்திலேயே வெளியிடப்படுவதோடு ஏல விற்பனையின் பெறுமதியை முழுமையாக பணமாக செலுத்தி அன்றைய தினத்திலேயே 16.30 மணிக்கு முன் பொருட்களை அகற்றிக் கொள்ள வேண்டும்.

**தலைமை செயலாளர் (சேவை வழங்கல்)**
**2023.07.17**
**சேவை வழங்கல் பிரிவு**
**விற்பனை பிரிவு**

## ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**

**(சர்வதேச அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்டது - உலக வங்கி)**

**மற்றும்**

**காலநிலை தாக்கங்களைக் குறைப்பதற்கான பலநிலை அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டப் பிரவேசம் (CResMPAP)**
**(அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாணத்திற்கு சர்வதேச வங்கியினால் நிதியிடப்பட்டது - உலக வங்கி)**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2023-04-07ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல் தொடர்பானது.

**02. பதிவுசெய்தல்**

விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் 2023-08-11ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் 2023-04-07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அசல் விளம்பரத்தில் உள்ளவாறு மாறாமல் அவ்வாறே இருக்கும்.

**குறிப்பு:** 1. இந்த விளம்பரத்தின் கீழ் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் தயவுசெய்து 2023-04-07ஆம் திகதி பிரசுரமான அசல் விளம்பரத்தைப் பின்பற்றவும். (அதை www.irrigation.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்)

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து நீர்ப்பாசன பணிப்பாளரை (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) 011-2582897 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது பிரதேச உதவியாளரை (ஒப்பந்தம்) 011-2583305 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

**திகதி: 2023-07-18.**

## விலைமனுகோரல்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

### இ – காணி கருத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் காணிப் பதிவாளர் அலுவலகங்களின் இணைப்பக்க நுணுகி நோக்கல் (Scanning) மற்றும் தரவுகளைப் பதித்தல்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஆண்டுக்கான இ-காணி கருத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இணைப்பாக நுணுகி நோக்கல் (Scanning) மற்றும் தரவுகளைப் பதிவதற்காக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் 2023.08.08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

02. விலைமனுக்கள் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இணைப்பாக்க நுணுகி நோக்கல் (Scanning) மற்றும் தரவுகளைப் பதிவதற்காக விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடியும்.

| தொ. இல. | அலுவலகம் | நுணுகி நோக்கல் (Scanning) செய்ய வேண்டிய இணைப்பக்கங்கள் |
|---|---|---|
| 01 | இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகம் | 945,338 |
| 02 | கேகாலை காணிப் பதிவாளர் அலுவலகம் | 988,700 |
| 03 | குருநாகல் காணிப் பதிவாளர் அலுவலகம் | 1,367,075 |

03. விலைமனு ஆவணங்களை 2023.08.08ஆம் திகதி மு.ப. 11.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 15,000.00 கட்டணத்தைச் செலுத்தி இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் சிறாப்பரிடமிருந்து பெற்றுக் கொண்ட சிட்டையை கணக்காளர் (வழங்கல்) இடம் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011-3070870 ஆகும். தேவையெனின் கட்டணம் செலுத்தாது இந்த ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

04. விலைமனு முன் சந்திப்பொன்று விலைமனுதாரர்களுடன் 2023.07.31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

05. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை விலைமனு நிபந்தனைகளுக்கு அமைய ரூ. 660,000.00 விலைமனு காப்பீட்டுடன் இணைப் பிரதிகளில் கடித உறையில் முத்திரையிட்டு 2023.08.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடவோ அல்லது பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எறும் முகவரிக்கு அனுப்பவோ முடியும். விலைமனு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இ-காணி கருத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் காணிப் பதிவாளர் அலுவலகங்களின் இணைப்பக்க நுணுகி நோக்கல் (Scanning) மற்றும் தரவுகளைப் பதித்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. 2021.08.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**கொள்முதல் குழுத் தலைவர்.**

**பதிவாளர் நாயகம்,**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல. 234/ஏ3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

## 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 131ஆம் அத்தியாயத்தின் கீழ் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் இலங்கை மக்களின் மன்னிப்பு கோருதல்

ஹெட்டிபொல வீதி, அக்கரவத்த, மூனமல்தெனிய எனும் முகவரியில் அமைந்துள்ள மலீஷா பாமசியின் உரிமையாளர் ரிட்டாதெனிய ஹெட்டிபொல முகவரியில் வசிக்கும் முஹந்திரம்லாகே இருமல் சுபுன்குமார நானாவேன்.

மேற்கூறப்பட்ட மருந்தகத்தில் பதிவுச் சான்றிதழ் இல்லாமல் மருந்து விற்பனை செய்தது தொடர்பாக குருநாகல் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரீட்சகர் வை.எம்.எம். ஹேமந்த அவர்களால் ஹெட்டிபொல நீதவான் நீதிமன்றில் 65980ஆம் இலக்கத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

அங்கு குற்றத்தைக் ஒப்புக்கொண்டதால் கௌரவ நீதிமன்றத்தினால் 2023-06-15ஆம் திகதி எனக்கு ஐம்பதாயிரம் ரூபா (ரூபா 50.000.00) தண்டம் விதிக்கப்பட்டது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இந்தக் குற்றத்தை மீண்டும் நான் செய்யமாட்டேன் எனப் பிரகடனப்படுத்துவதோடு செய்த குற்றம் தொடர்பில் சகல இலங்கை மக்களிடமும் நான் மன்னிப்பு கோருகின்றேன்.

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 21

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகிறது. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்த 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலை மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு எண் :- SI/LP/GB/25/31/2023/12**

**பொருட்கள் :- Gray Board - 2mm ± 5% -25"x31" - 1200gsm±5% - 40 Reams**

**விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம்:- 2023/08/08 பி.ப. 2.00 மணி.**

**மீளளிக்கப்படாத கட்டணம் : ரூபா 4,200.00**

**2023/08/08ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறு அவ்வேளையிலேயே மனுக்கள் திறந்து வைக்கப்படும்.**

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு மனு தொடர்பிலும் மீளளிக்கப்படாத மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் அவை தொடர்பான எழுத்து மூலமான கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு முந்திய தினம் பி.ப 2.00 மணிக்கு முன்னதாக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் www.documents.gov.lk**
2023/07/13

## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.04.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.07.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**25.07.2023**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி காலி பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 03.08.2023 திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் கீழ் காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் கிளையில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| **ஏல விற்பனை செய்யப்படும் திகதி** | **05.08.2023 (சனிக்கிழமை)** |
| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | காலி கோட்டை கிளை |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | கலி கோட்டை, அம்பலங்கொடை, எல்பிட்டிய, பத்தேகம, உடுகம, ஹிக்கடுவ, பலப்பிட்டிய, காலி பிரதான வீதி, அஹங்கம, ஊரகஸ்மன்ஹந்திய, பட்டபொல, இமதுவ, தல்கஸ்வல, வந்துரம்ப, கொக்கல, கராப்பிட்டிய |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | வஞ்சாவல, கிந்தோட்ட, பெட்டிகலவத்த, அம்பலங்கொடை, பிரதான வீதி, வத்துகெதர, கரந்தெனிய, பிட்டிகல, குருந்துகஹ, நெலுவ, ரத்கம, கோணபீனுவல, குமாரகந்த, கொஸ்கொட, களுவெல்ல, பின்னதுவ, மீட்டியாகொட, யக்கலமுல்ல, போகஹகொட, நாகொட |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**காலி**
**தொலைபேசி இல. 091-2223563, 091-2223564, 091-2234174**

PEOPLE'S BANK Pride of the Nation

### மக்கள் வங்கி - கண்டி பிராந்திய தலைமைக் காரியாலயம்

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

கண்டி பிராந்தியத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 2022.03.31 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி வரை மீட்டுக்கொள்ளப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடங்களில் **காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.**

| **ஏல விற்பனை நிகழும் தேதி** | **2023.08.05 மற்றும் 2023.08.06** | **2023.08.05 மற்றும் 2023.08.06** | **2023.08.05 மற்றும் 2023.08.06** | **2023.08.12 மற்றும் 2023.08.13** | **2023.08.12 மற்றும் 2023.08.13** |
|---|---|---|---|---|---|
| **இந்த தேதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கப்படாத நகைகள்** | **2023.08.04** | **2023.08.04** | **2023.08.04** | **2023.08.11** | **2023.08.11** |
| **ஏல விற்பனை நிகழும் இடம்** | கண்டி கிளை வளாகம் | பேராதனை கிளை வளாகம் | கம்பளை கிளை வளாகம் | கடுகஸ்தோட்டை கிளை வளாகம் | தெல்தெனிய கிளை வளாகம் |
| **அடகு வைக்கப்பட்ட கிளைகள்** | கண்டி, கண்டி நகர மையம், செங்கடகல | பேராதனை, தவுலகல, கடுகண்ணாவை, பிலிமத்தலாவை, தெல்தோட்ட | கம்பளை, நாவலப்பிட்டி, புஸ்ஸல்லாவை, கெலிஓயா | கடுகஸ்தோட்டை, அகுறனை, மெனிக்கின்ன, அங்கும்புர, பன்வல, வத்தேகம, அலவத்துகொட, பூஜாபிட்டிய, கலகெதர, ஹதரலியத்த | தெல்தெனிய, ஹசலக |
| **அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்** | நீதிமன்ற வளாகம், வழக்கறிஞர் அலுவலகம், குண்டசாலை, மஹய்யாவா, பல்லேகல, மாரஸ்ஸன, தலாத்துஓயா | முருதலாவ பல்கலைக்கழகம், கிரிபத்கும்புர, கலஹா, வெலம்பொட, பொத்துபிட்டிய, பல்லேகம | கம்பளை நகரம், குருந்துவத்தை | பொல்கொல்ல, ஹெடெனிய, திகன, மடவளை, அம்பதென்ன, பொக்காவல, ஹுலுகங்கை | மேதமகனுவர, உடுதும்பர, கொலொங்கொட |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல. 17, தலதா வீதி, கண்டி.**
**தொலைபேசி இல. 081-2234283 / 081-2228383**

PEOPLE'S BANK Pride of the Nation

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

# மலையக கலை, கலாசார சங்கத்தின் நினைவேந்தலும் விருது வழங்கலும்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

மலையக கலை, கலாசார (இரத்தின தீப) சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் டாக்டர் அம்பேத்கார், இலங்கையின் திரைப்பட நடிகர், ஆய்வாளர், சித்த வைத்தியர் கலைஞர் விஸ்லநாத ராஜா, இலங்கை தமிழ் திரைப்பட நடிகை அஞ்சலி தேவி, கண்டியூர் சந்திரா ஆகியோர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வும், கல்வி, சமூக நல அபிவிருத்தி, ஊடகத்துறை சார்ந்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கண்டி கெப்பட்டிப் பொல ஞாபகார்த்த மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் துணைத் தலைவரும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பரத் அருள்சாமி கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் துரை மனோகரன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளரும் இந்து இளைஞர் மன்றத்தின் பொருளாளருமான சமூகப் பணியாளர் எஸ். பரமேஸ்வரன், சமூகப் பணியாளர் எஸ். தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியின் அதிபர் கவிஞர் பெ. சிவகுமாரின் வரவேற்புரையுடன் கலைஞர் விஸ்லநாத ராஜா பற்றிய நினைவேந்தல் உரையினை அவரது மனைவி இஸ்மாலீகா விஸ்வநாத ராஜா நிகழ்த்தினார்.

இதன் போது இலங்கை சிங்கள திரைப்பட தயாரிப்பாளர் இயக்குனர் பத்ம ஸ்ரீ கொடிகார, சந்திரரதனா ரட்ணராஜ குருக்கள், கேசகர் மூர்த்தி, ரொபட் டேனியல், தேசாபிமானி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.







## பெறுகை அறிவித்தல்

### முன்பள்ளி காகிதாதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல்

**ஆனமடுவ பிரதேச சபை**

ஆனமடுவ பிரதேச சபையின் முன்பள்ளிகளுக்காக காகிதாதிகள் மற்றும் உள்ளக விளையாட்டு துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறைந்தபட்ச விலைகள் 2023-07-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் செயலாளர், பிரதேச சபை, ஆனமடுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''முன்பள்ளி துணைப்பாகங்களுக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைகள் கோரப்படும் காகிதாதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் தொடர்பான விபரங்களை தலைமை அலுவலகத்தில் 032-2263275 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக விசாரித்தறிந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**ஆனமடுவ.**

## இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 59வது வருடாந்த ஒன்று கூடலும் 21வது பிரதிநிதிகள் பொது மகாநாடும்

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 59வது வருடாந்த ஒன்று கூடலும் 21வது பிரதிநிதிகள் பொது மகாநாடும் 2023 செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதியன்று பிலிமத்தலாவை, ஸ்ரீ டிரானந்த தேசிய பாடசாலையில் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

எமது சங்கத்தின் யாப்பின் 7:1 இன் பிரகாரம் மத்திய குழுவுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு போட்டியிட விரும்பும் அங்கத்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை மாவட்ட கிளையூடாக மாத்திரம் 2023.08.04ம் திகதிக்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பெயர் முன்மொழிவு' எனக்குறிப்பிட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் அவர்களுக்கு பதிவுத் தபால் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பதவிகள்:**

1. கௌரவ தலைவர்
2. கௌரவ உப தலைவர் (04 இடங்கள் உள்ளன)
3. கௌரவ பொதுச் செயலாளர்
4. கௌரவ உப செயலாளர் (04 இடங்கள் உள்ளன)
5. கௌரவ பொருளாளர்

**இவ்வண்ணம்**
**எஸ்.ஏ. அத்துல சீலமன் ஆராச்சி**
**பொதுச் செயலாளர்,**
**இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம்,**
**45/94, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு -05.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| Item No. | Description of Work | CE Region |
|---|---|---|
| 01 | Rectification and Sand Sealing on Balangoda-Rassagala-Uwella Road (9 + 000 to 14 + 000) Km | Ratnapura |
| 02 | Rectification and Sand Sealing on Pabahinna-Kubalgama-Rajawaka-Kapugala Road (25 + 000 to 28 + 000) Km | Ratnapura |

தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.07.19 முதல் 2023.08.17 வரை RDA மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் www.rda.gov.lk என்ற இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்கப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிரதம பொறியியலாளர் பணிமனை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இரத்தினபுரி.**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மாவடிவேம்பு பாம் வீதிக்கான திருத்தங்கள் |
| மட்டக்களப்பு, சாந்திவெளியின் 1 ஆம் குறுக்கு வீதியின் புனர்நிர்மாணம் |
| மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை ஆலய வீதியின் புனர்நிர்மாணம் |
| மட்டக்களப்பு, காயன்குடா-பொதி-01 (1000 மீ) உள்ளக வீதிக்கான திருத்தங்கள் |
| மட்டக்களப்பு, காயன்குடா-பொதி-02 (1000 மீ) உள்ளக வீதிக்கான திருத்தங்கள் |
| பாலதோப்பூர்-சேருவில வீதி (B347) பிரிவு (3+452-5+580) கிமீ |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.07.18 ஆம் திகதியிலிருந்து 2023.07.25 ஆம் திகதி வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்**

## விலைமனுக்கோரல் (IFB)

கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | மீளச் செலுத்தப் படாத கட்டணம் (ரூ). | காலம் | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| CLT/WK/041/2023 | கொழும்பு தாமரைக் கோபுரத்தில் நுழைவாயிலை வடிவமைத்து கட்டுதல் | 2,000.00 | 30 நாட்கள் | 60,000.00 | 2023.07.27 13.45 மணி |
| CLT/WK/042/2023 | தாமரைக் கோபுரத்தின் 5 மீட்டர் உயரத்தில் நிலப்பரப்பினை வடிவமைத்து கட்டுதல் | 2,000.00 | 30 நாட்கள் | 100,000.00 | 2023.07.27 14.00 மணி |
| CLT/SER/014/2023 | சிஸ்கோ நெட்வொர்க் சாதன உரிமம் மற்றும் சிஸ்கோ சப்போர்ட் உத்தரவாதத்தை புதுப்பித்தல் | 1,000.00 | 30 நாட்கள் | 70,000.00 | 2023.07.27 14.15 மணி |
| CLT/SER/013/2023 | கொழும்பு தாமரைக் கோபுரத்தில் தோட்டம் மற்றும் வாகன தரிப்பிடம் உட்பட எலிகள்,கரப்பான் பூச்சிகள், எறும்புகள் மற்றும் ஈக்களை மட்டுப்படுத்துவதற்கான பரிசோதனை மற்றும் மாதாந்த சிகிச்சைகள் | 1,000.00 | 30 நாட்கள் | 12,000.00 | 2023.07.27 14.30 மணி |
| CLT/WK/043/2023 | 15 மீட்டர் உயரத்தில் வெளிப்புற ஒலி அமைப்பு வழங்கல் மற்றும் நிறுவல் (வடிவமைப்பு மற்றும் உருவாக்கம்) | 1,000.00 | 30 நாட்கள் | 100,000.00 | 2023.07.27 14.45 மணி |
| CLT/GOODS/007/2023 | சுழலும் உணவகத்திற்கான ஹோட்டல் முகாமைத்துவ கணினி உபகரணங்களை வழங்கல் | 2,000.00 | 30 நாட்கள் | 300,000.00 | 2023.07.27 15.00 மணி |
| CLT/GOODS/008/2023 | கொழும்பு தாமரைக் கோபுரத்திற்கு கணினி உபகரணங்களை வழங்கல் | 1,000.00 | 30 நாட்கள் | 50,000.00 | 2023.07.27 15.15 மணி |
| CLT/WK/044/2023 | சுழலும் உணவகத்தின் ஒலி அமைப்பினை புதுப்பித்தல் | 2,000.00 | 30 நாட்கள் | 30,000.00 | 2023.07.27 15.30 மணி |

1. ஆர்வமுள்ள மனுதாரர்கள் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி **2023.07.18** ஆம் திகதி முதல் **2023.07.27** ஆம் திகதி 1300 மணி வரை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலதிக விபரங்களை இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.
   (தொ.பே: **0112-421952 | 0742 019776** மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk)**
3. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**
4. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10** இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
5. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்.**
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10,**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

## விலைமனுக்கோரல்

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட "BIADP PII S2 PACKAGE A" கருத்திட்டத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கூலி அடிப்படையில் தொழிற்படையினை பெற்றுக்கொள்ளல் கட்டம் II தொடர்பாக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.**

**SUPPLY OF MAN POWER FOR SITE MAINTENANCE DURING PROJECT TERMINATION STAGE II - BIADP PII S2 PACKAGE A.**

**விலைக்கேள்வி இலக்கம் 053/T/2023**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பில், தவிசாளரால் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட "BIADP PII S2 PACKAGE A" கருத்திட்டத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கூலி அடிப்படையில் தொழிற்படையினை பெற்றுக்கொள்ளல் கட்டம் II" தொடர்பில் முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகுதி மற்றும் தகைமைபெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. இவ் ஒப்பந்தத்தில் உட்படுத்தப்படும் வேலைக்கூறுகளுக்குத் தேவையான விலைக்கேள்வியாளர்களுக்கான அறிவுறுத்தல்கள், ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் தொழில்தருநர் தேவைப்பாடுகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் விவரக்குறிப்பீடுகளுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான மதிப்பிடப்பட்ட தொகை அண்ணளவாக ரூ.30 மில்லியன்களாகும்.

ஒப்பந்த கால எல்லை நூற்று எண்பது 180 நாட்களாகும்.

கருத்திட்டங்கள் அமைவிடம் : பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க

தேசிய போட்டியிடல் விலைக்கேள்வி நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 2023.07.18 ஆந் திகதி முதல் 2023.07.28 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 04.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், தலைவர், கருத்திட்ட பிரிவின் தலைவரை, தொலைபேசி இலக்கம் 011-2263700 ஊடாக அழைப்பதனூடாக அறிந்து கொள்ள முடியும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2023.07.18 முதல் 2023.07.28 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், பெறுகைக் குழு இலக்கம் 1 இன் தவிசாளருக்கு திருப்பி தரப்படாத ரூபா. ஒன்பதாயிரம் (ரூபா 9,000/-) மாத்திரம் காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள பூரணமான விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்வியினை அதன் நகலுடன் சேர்த்து, 2023.08.02ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர், தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 1, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா மூன்று இலட்சம் (ரூபா. 300,000) மாத்திரம் பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் குறித்த விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கும் 2023.07.24ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், கருத்திட்ட பிரிவின், கலந்துரையாடும் அறையில் (Conference Room) நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வி தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# இலங்கையின் சவாலை சமாளித்து பாகிஸ்தான் ஸ்திரமான ஆட்டம்



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸை ஆடும் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப விக்கெட்டுகளை இலங்கை பந்துவீச்சாளர்களால் முன்கூட்டியே வீழ்த்த முடிந்தது.

இதன்படி காலி சர்வதேச அரங்கில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்டின் இரண்டாவது நாளான நேற்று (17) ஆட்ட நேர முடிவின்போது தனது முதல் இன்னிங்ஸை ஆடும் பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுகளை இழந்துள்ளது.

அந்த அணி முதல் இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுகள் கைவசம் இருக்கும் நிலையில் இலங்கையை விடவும் தொடர்ந்து 91 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

முன்னதாக நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி சார்பில் தனஞ்சய டி சில்வா தனது 10ஆவது டெஸ்ட் சதத்தை பெற்றார். தனது 50 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடும் தனஞ்சய 214 பந்துகளில் 12 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 122 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம் இலங்கை அணி 95.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 312 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது பாகிஸ்தான் அணி சார்பில் ஷஹீன் ஷா அப்ரிடியுடன் நசீம் ஷா மற்றும் அப்ரார் அஹமட் மூவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பகல்போசண இடைவெளிக்குப் பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 101 ஓட்டங்களை பெறுவதற்குள்ளேயே முதல் ஐந்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

ஆரம்ப வீரர் இமாமுல் ஹக் ஒரு ஓட்டத்தை பெற்ற நிலையில் கசுன் ராஜித்தவின் பந்துக்கு ஆட்டமிழக்க, மறுமுனையில் இருந்த அப்துல்லா ஷபீக் 19 ஓட்டங்களையே பெற்றார்.


இதன்போது வேகமாக துடுப்பெடுத்தாட முயன்ற ஷா மசூத்தை 39 ஓட்டங்களுடன் ரமேஷ் மெண்டிஸ் வெளியேற்றினார். அணித்தலைவர் பாபர் அஸாமினால் 13 ஓட்டங்களையே பெற முடிந்தது. இலங்கை சார்பில் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய தனது மூன்றாவது விக்கெட்டாக சப்ராஸ் அஹமட்டை 17 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

எனினும் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த சவுத் ஷகீல் மற்றும் அகா சல்மான் பாகிஸ்தான் அணியை நெருக்கடியில் இருந்து மீட்டனர். இருவரும் பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 120 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதில் ஷகீல் 69 ஓட்டங்களுடனும் சல்மான் 61 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

மழை குறுக்கிட்டதால் நேற்றைய தின ஆட்டம் சற்று முன்கூட்டியே நிறுத்தப்பட்டது. இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

## வெண்கலம் வென்றார் பிரியன்த



பிரான்ஸில் நடைபெற்றுவரும் உலக பாரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் தினேஷ் பிரியன்த வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

இதன்மூலம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாரிஸ் பாராலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பு தினேஷ் பிரியன்தவிற்கு கிடைத்தது.

கடந்த ஞாயிறன்று (16) நடைபெற்ற ஆண்களுக்கான எப்46 ஈட்டி எறிதல் போட்டியில் பங்குகொண்ட தினேஷ் பிரியன்த தனது 4ஆவது முயற்சியில் 65.38 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார். எவ்வாறாயினும், 3 சென்டி மீற்றரினால் தங்கப் பதக்கம் வெல்கின்ற வாய்ப்பை அவர் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்திய வீரர்களான அஜித் சிங் 65.41 மீற்றர் தூரத்தை எறிந்து புதிய உலக பாரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் சாதனையுடன் தங்கப் பதக்கத்தையும், ரின்கு 65.38 மீற்றர் தூரத்தை எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.




## எவகிறீன் அணி சம்பியன்

**ஏறாவூர் சுழற்சி நிருபர்**



ஏறாவூர் சில்வர் பிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய மர்ஹூம் லூலூ றியாழ் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டியில் மட்டக்களப்பு எவகிறீன் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஏறாவூர் அகமட் பரீட் மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் யங் அல் பதாஹ் அணி நிர்ணயித்த 35 ஓட்ட வெற்றி இலக்கை இலகுவாக எட்டி எவகிறீன் வெற்றியீட்டியது. இந்தத் தொடரில் 45 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## சம்பியனானது றஹீமிய்யா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



ஆலையடிவேம்பு ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தின் ஆதரவில் ஆலையடிவேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

32 விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்ட இந்த தொடரின் இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை (14) இடம்பெற்றது. இதில் ஆலங்குளம் அல்–அக்ஸா அணியை 25 ஓட்டங்களால் றஹீமிய்யா அணி வீழ்த்தியது.

# சோன்டர்ஸை வீழ்த்தி மாளிகாவத்தை அரையிறுதிக்கு அதிரடி முன்னேற்றம்



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் ஆரம்ப சுற்றுக்காக நடைபெற்ற சோன்டர்ஸ் விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையிலான போட்டியில் மாளிகாவத்தை யூத் 3–1 என்ற கோல் கணக்கில் அதிரடி வெற்றியை பெற்றது. வார இறுதியில் முடிவுற்ற ஆரம்ப சுற்றின் மற்ற கடைசி போட்டியில் ஜாவாலேன் அணியை வீழ்த்தி கொழும்பு கால்பந்து கழகம் 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதன்படி எதிர்வரும் வார இறுதியில் ஜாவாலேன் மற்றும் கொழும்பு கால்பந்து கழகம், மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகள் அரையிறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

சோன்டர்ஸ்–மாளிகாவத்தை யூத் இடையிலான போட்டியின் முதல் பாதியின் 12ஆவது நிமிடம் மற்றும் 19ஆவது நிமிடத்தில் மொஹமட் சப்ராஸ் இரு கோல்களை பெற்று மாளிகாவத்தை யூத் அணியை முன்னிலை பெறச்செய்தார். அதற்கு பதிலடியாக சோன்டர்ஸ் அணியின் பத்தும் கிம்ஹான 40ஆவது நிமிடத்தில் கோல் பெற்றார். போட்டியின் 88ஆவது நிமிடத்தில் எம்.என். எம். அப்துல்லா மாளிகாவத்தை யூத் அணிக்கு மூன்றாவது கோலை புகுத்தினார்.

ஜாவாலேன் அணிக்கு எதிராக கொழும்பு கால்பந்து கழகத்தின் அஹமட் ஷஸ்னி 67ஆவது நிமிடத்தில் பெற்ற கோல் வெற்றி கோலாக அமைந்தது. இதன்மூலம் கொழும்பு கால்பந்து கழகம் 8 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டது. ஜாவாலேன் 7 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பிடித்தது.

மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகள் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை பிடித்து அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

6ஆவது முறை நடைபெறும் சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 150,000 ரூபாவும் இரண்டாம் இடத்தை பிடிக்கும் அணிக்கு 100,000 ரூபாவும் பரிசாக வழங்கப்படவிருப்பதோடு ஒவ்வொரு போட்டியிலும் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடரின் அரையிறுதிப் போட்டிக்குப் பின் எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

## ஆடை கட்டுப்பாடு குறித்து ஈரானில் மீண்டும் சோதனை



பெண்கள் ஆடை கட்டுப்பாடுகளுக்கு கீழ்படிவது மற்றும் பொது இடங்களில் தமது தலைமுடியை மறைப்பதை உறுதி செய்யும் சர்ச்சைக்குரிய சோதனையை ஈரானிய பொலிஸார் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் ஹிஜாப் சட்டங்களை செயற்படுத்துவதற்கு ஒழுக்காற்று பொலிஸார் வீதிகளுக்கு திரும்பி இருப்பதாக பேச்சாளர் ஒருவர் ஞாயிறன்று (16) தெரிவித்துள்ளார்.

ஆடை கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மஹசா அமினி என்ற பெண் தடுப்புக் காவலில் உயிரிழந்த சம்பவத்திற்கு 10 மாதங்களின் பின்னரே மீண்டும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த பெண்ணின் மரணம் தேசிய அளவில் ஆர்ப்பாட்டத்தை துண்டியதோடு இந்த சோதனை நடவடிக்கையும் நிறுத்தப்பட்டது. ஷரியா சட்டம் தொடர்பான நாட்டின் வியாக்கியானம் அடிப்படையில் ஈரானிய சட்டத்தில், பெண்கள் ஹிஜாப் மூலம் தலைமுடியை மறைக்க வேண்டும் என்பதோடு உடல் உருவத்தை மறைக்க நீண்ட தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.

அந்த விதிகளை உறுதிப்படுத்துவதே ஒழுக்காற்று பொலிஸாரின் பணியாகும். இந்த ஆடைக்கட்டுப்பாடுகளை மீறுவோர் கைது செய்யப்படுகின்றனர். இந்த வீதிச் சோதனையின்போது விதிகளுக்கு கட்டுப்படாத பெண்கள் முதலில் எச்சரிக்கப்படுவார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் சயீத் மொன்டசரோமஹதி தெரிவித்தார்.

## சந்திரயான்–3க்கு பாராட்டு



சந்திரயான்–3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதற்கு அமெரிக்காவின் நாஸா நிறுவனம், பிரிட்டனின் விண்வெளி ஆய்வகம், ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு, அவுஸ்திரேலிய கன்பெரா விண்வெளி வலையமைப்பு உள்ளிட்ட விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் பாராட்டுகளை தெரிவித்துள்ளன.

சந்திரனின் தென் பகுதியை ஆய்வு செய்யும் நோக்கில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ சந்திரயான் – 3 விண்கலத்தை வெற்றிகரமாக ஏவியுள்ளது. அதனைத் தொடர்ந்து உலகெங்கிலும் இருந்து பாராட்டுகள் வந்துள்ளன.

## சர்வதேச செய்திகள்

### கிரிமியா பாலம் மீதான தாக்குதலுக்கு உக்ரைனின் மீது ரஷ்யா குற்றச்சாட்டு



உக்ரைனில் போரிடும் ரஷ்ய துருப்புகளுக்கான முக்கிய பாதையாக உள்ள கிரிமியா பாலத்தின் மீது உக்ரைன் நடத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டும் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு அவர்களின் மகள் காயமடைந்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு ரஷ்யா தனது ஆட்புலத்தில் இணைத்துக் கொண்ட கிரிமியா பிராந்தியத்தை ரஷ்யாவுடன் இணைக்கும் 19 கிலோமீற்றர் நீளம் கொண்ட பாதை மற்றும் ரயில் பாலத்தில் நேற்று (17) இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதனால் அந்தப் பாலம் சேதமடைந்திருக்கும் உறுதி செய்யப்படாத படங்கள் வெளியாகியுள்ளன.

இதனை பயங்கரவாதத் தாக்குதல் என வர்ணித்திருக்கும் ரஷ்ய அதிகாரிகள் இதன் பின்னணியில் உக்ரைன் இருப்பதாக குற்றம்சாட்டியுள்ளனர். எனினும் ரஷ்யா ஆத்திரத்தை தூண்டுவதற்காக இவ்வாறான தாக்குதலை நடத்தி இருப்பதாக உக்ரைனிய இராணுவம் கூறியபோதும் இந்த சம்பவத்தின் பின்னணியில் உக்ரைனிய இராணுவம் இருப்பதாக அடையாளம் வெளியிடப்படாத வட்டாரத்தை மேற்கோள்காட்டி உக்ரைனிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் கார் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த பெற்றோர்கள் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் மகள் காயமடைந்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### இரு மாதங்கள் கடலில் உயிர்தப்பிய நபர் மீட்பு



பசுபிக் பெருங்கடலில் இரண்டு மாதங்களாக பச்சை மீன்களை சாப்பிட்டு மழை நீரை குடித்து உயிர் தப்பிய அவுஸ்திரேலிய நாட்டு மாலுமி ஒருவர் சிறந்த உடல்நிலையுடன் மீட்கப்பட்டுள்ளார்.

சிட்னியைச் சேர்ந்த 51 வயது டிம் ஷடொக் என்பவர் தனது நாயுடன் கடந்த ஏப்ரலில் மெக்சிகோவில் இருந்து பிரான்ஸின் பொலினிசியா தீவுக்கு புறப்பட்ட நிலையில் புயலில் சிக்கி அவரது படகு சேதமடைந்துள்ளது.

அவர் கடலில் தத்தளிப்பதை ஹெலிகொப்டர் ஒன்று அவதானித்ததை அடுத்தே இழுவை படகு ஒன்று அவரையும் அவரது நாயையும் மீட்டுள்ளது.

### தென்னாபிரிக்காவில் தீயில் பல நூறு வீடுகள் அழிந்தன



தென்னாபிரிக்க துறைமுக நகரான டர்பனின் வறிய பகுதி ஒன்றில் ஏற்பட்ட தீயில் நூற்றுக்கணக்கான வீடுகள் கருகியுள்ளன.

சட்டவிரோத குடியிருப்புப் பகுதியில் கடந்த ஞாயிறன்று ஏற்பட்ட இந்த தீயினால் ஒருவர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் மேலும் பலர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தீக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் போதையில் இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே தீ பரவியதாக கூறப்படுகிறது.

இந்தத் தீயினால் சுமார் 1000 குடிசைகள் அழிந்திருப்பதோடு சுமார் 3000 பேர் வீடுகளை இழந்திருப்பதாக தென்னாபிரிக்க செஞ்சிலுவை சங்க பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.